


தினப்புயல்
news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –397

# பாதாள உலக கோஷ்டியுடன் இணைந்து போதைப்பொருள் கடத்தும் அரசியல்வாதிகளை அரசு கைது செய்யுமா?



# சீனா, அமெரிக்கா, இந்தியா புலனாய்வாளர்களின் ஊடுருவலே இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணம்



# தமிழ் இனத்தின் விடுதலைக்காக போராடிய ஆயுத கட்சிகளின் இன்றைய நிலை




# களைகட்டும் உள்ளூராட்சி தேர்தலும், கவிழப்போகும் ஆட்சியாளர்களும்

# பாதாள உலக கோஷ்டியுடன் இணைந்து போதைப்பொருள் கடத்தும் அரசியல்வாதிகளை அரசு கைது செய்யுமா?

இலங்கை திருநாட்டுக்குள் போதைப்பொருள் எப்படி கொண்டு வரப்படுகின்றது?. இதனை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் என்ன?. இதனுடன் தொடர்புடைய மாபியாக்களை அரசாங்கம் ஏன் ஒரு தலைபட்சமாக கண்டுகொள்ளாது இருக்கின்றது? அந்த வகையில் இலங்கையில் இருக்கின்ற பெரும் பணக்காரர்களே இந்த வியாபாரத்தை செய்கின்றார்கள் என புள்ளிவிபரவியல் கூறுகின்றது. ஆனால் அவர்களும் அவர்களது குடும்பங்களும்



கூறுகின்றது. இதில் பிடிபடுகின்றவர்களின் எண்ணிக்கையையும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையிலும் கணிக்கப்படுகின்றது. இதில் போதைப்பொருள் உற்பத்தியாளர்கள் கைது செய்யப்படுவது என்பது மிக குறைவாகவே இருக்கின்றது. ஆகவே போதைப்பொருள் வருகின்ற மார்க்கத்திலும் அதனை விற்பனை செய்கின்றவர்களையும் பிரதானமாக கைது செய்யும் பொழுது இதற்கான தீர்வை ஓரளவேனும் எடுக்கக்கூடியதாக இருக்கும். கடந்த காலங்களில் போதைப்பொருட்களுடன் தொடர்புடைய பலர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர், பலர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். போதைப்பொருள் மாபியாக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கைது செய்யப்பட்டு நல்லாட்சி காலத்தில் என்கவுன்டிரில் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பது வரலாறு. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் கடல் மார்க்கமாக இந்தியா, அமெரிக்கா, சீனா, இலங்கை ஆகிய நான்கு நாடுகளின் கடற்படை

வளமுள்ள நாடாக மாற்றுகின்றோம் என்று கூறுகின்ற இந்த நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் போதைப்பொருள் பாவனையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர ஏன் தவறியிருக்கின்றார் என்ற கேள்வியும் தற்பொழுது எழுப்பப்படுகின்றது.

காலத்துக்கு காலம் மாறி மாறி வருகின்ற அரசாங்கம் ஒவ்வொன்றும் இனப்பிரச்சனையிலும் தமிழினத்தை அடக்கி ஒடுக்குவதிலும் குறியாக செயற்பட்ட காலத்தில் போதைப்பொருள் இந்த நாட்டுக்குள் கொண்டு வருவது என்பது மிகவும் கடினமாக இருந்தது. யுத்தம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் குறித்த நாடுகள் தமது வியாபாரத்தை மேம்படுத்துகின்றோம் என்ற நோக்கில் கடலிலும் வான் பரப்பிலும் இப் போதைப்பொருள்களை கடத்துகின்ற செயற்பாடாகவே இதனை இவர்கள் செய்கின்றனர். தண்டனைகள் அதிகரித்து காணப்படுகின்ற பொழுதிலும் அத்

## கடல், வான், தரை ஊடாகவே போதைப்பொருட்களை இவர்கள் கடத்துகின்றனர் அரசாங்கம் ஏன் கண்டுகொள்வதில்லை?

போதைப்பொருட்களை பயன்படுத்துவதில்லை. ஐஸ் போதைப்பொருளினுடைய தாக்கம் என்பது 2018 - 2022 வரை அதனுடைய தாக்கம் அதிகரித்தது. போதைப்பொருள் குற்றத்தடுப்பு பிரிவில் விசேட அதிரடிப்படையினரும் களத்தில் இறக்கப்பட்டிருந்தனர். கடந்த 2018 ஆம் ஆண்டு விசேட அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பில் 278 கிலோகிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக அறிவித்திருந்தார்கள். அதன் பெறுமதி 3336 பில்லியனாகும். இது சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்டு வந்த வேளையிலே கைப்பற்றப்பட்டவையாகும். போதைப்பொருள் குற்றத்தடுப்பில் தடுத்து வைக்கப்பட்டவர்களாக மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 96 ஆகவும், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 275 ஆகவும் போதைப்பொருள்களுடன் தொடர்புடையவர்கள் அல்லது சிறுசிறு வியாபாரிகள் என 3,119 பேர் அடையாளங்காணப்பட்ட நிலையில் தொடர்ந்தும் 2022 வரையில் அதன் எண்ணிக்கை பன்மடங்காக அதிகரித்துள்ளது. போதைப்பொருள் வியாபாரங்களுடன் தொடர்புடைய 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் இடம்பெற்ற காலத்தில் கூட இவ்வாறான நிலைமை இந்த நாட்டில் ஏற்படவில்லை.

குறிப்பாக 2018 - 2022 வரை பெருவாரியான போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள் என 16 சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பல கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருள் விற்பனை இடம்பெற்று கண்டறியப்பட்டுள்ளன. போதைப் பழக்கத்துக்கு அடிமையான 3000 பேர்களில் 1500 வரையானோர் மிகவும் அபாய கட்டத்திலுள்ளனர். அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியோடு இவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்ட போதிலும் குறுகிய காலத்துக்குள் இவர்கள் மீண்டும் போதைப்பொருள் பாவனையாளர்களாகவும், யுத்தத்துடன் தொடர்புடையவர்களாகவும் மாறியுள்ளனர். குறிப்பாக இவர்களின் மனோநிலையை மாற்றியமைப்பதற்கு இறைவனோடு கூடிய தியானங்களும், மதபோதனைகளுமே இதற்கான தீர்வாக அமையப்பெறும். அரசாங்கத்துடனான நிலைமைகளை பொறுத்த வரை தேர்தல் காலங்களில் பணத்தை செலவழிப்பதற்கான போதைப்பொருள் மாபியாக்களை களத்தில் இறக்குகின்றார்கள். இவர்கள் இந்தியாவின் கேரள மாநிலத்தில் இருந்தும், தமிழ் நாட்டில் இருந்தும், பாகிஸ்தான், மெக்சிக்கோ போன்ற நாடுகளில் இருந்தும் இலங்கைக்கு போதைப்பொருட்களை கடத்தி வருகின்றனர். கேரள கஞ்சாவிற்கு இலங்கை

சந்தையில் நல்ல இடமுண்டு என்பதனை அறிந்து கொண்ட குறித்த மாபியாக்கள் அரச கடற்படை உதவிகளோடு இதனை மேற்கொண்டு வருகின்றமை கண்டறியப்பட்ட நிலையிலும் கடல் வளத்தை பாதுகாக்க இலங்கை அரசாங்கம் தவறியுள்ளமை இங்கு கவலைக்குரிய விடயமாகும். 2018 ஆம் ஆண்டிலிருந்து அதிகரித்து வந்த ஐஸ் போதைப்பொருளின் வீச்சு என்பது இன்று பாடசாலை மாணவர்கள் மற்றும் இளம் சந்ததியினர் மத்தியில் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழல் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. போதைக்கு அடிமையாகிய இவர்கள் என்ன செய்வது என அறியாது தகாத உறவுகளில் ஈடுபடுகின்ற நிலைமைகளும் உருவாகின்றது.

சர்வதேச ரீதியாக இலங்கைக்கு கொண்டு வரப்படுகின்ற போதைப்பொருட்களை தடுத்து நிறுத்த அரசாங்கம் என்ன வழிமுறைகளை கையாண்டிருக்கின்றது என்பதனை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். குற்ற தடுப்பு முகாமையாளர்கள் மற்றும் விசேட அதிரடிப்படையினர் பொலிஸாரர் கைது செய்யும் நபர்களை தற்பொழுது பார்த்தால் 17 வயது தொடக்கம் 30 வயதானோர் ஆகவே இருக்கின்றது. இவர்களுக்கு தவணைகள் கொடுக்கப்படுகின்றது 50கிராம், 100கிராம், 250கிராம் என இவர்கள் வைத்திருந்ததாகவும் பாவனையில் ஈடுபட்ட பொழுது இவர்கள் கைது செய்யபட்டதாகவும் நீதி மன்றங்களில் இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டு வருட கணக்கில் இவர்களை சிறையில் அடைக்கும் நிலை எழுந்துள்ளது. திருமணமாகி வயிற்றில் மற்றும் கையில் குழந்தையுடன் சிறைச்சாலைக்கு வரும் இளம் சமுதாயத்தினரின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே செல்கின்றது. இலங்கையில் தற்போதைய சூழ்நிலையில் போதை மாத்திரைக்கு அடிமைகளாக மாதம் ஒன்றுக்கு 1500 பேர் பாதிக்கப்படுவதாக புள்ளிவிபரவியல்

கண்களுக்கு மண்தூவியே இந்த போதை மாத்திரைகள் கொண்டு வரப்படுகின்றது. இந்த நாட்டுக்கு கொண்டுவரப்பட்டதுடன் இலங்கையில் இருக்கக்கூடிய போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. அதிலும் குறிப்பாக ஒருசில மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்ற போதைப்பொருட்களே பிடிக்கப்படுகின்றன. எமது நாட்டில் யுத்தத்தின் பின்னர் பெரும் சவாலாக மாறியுள்ள விடயம் தான் போதைப்பொருள் வியாபாரம். 30 வருட காலங்களுக்குள் மேலாக வட கிழக்கு பகுதியில் போதைப்பொருள் அற்ற ஒரு நிலைமையே காணப்பட்டது. கற்பளித்தல் போதைப்பாவனை போன்றவற்றிற்கு தமிழீழ விடுதலைப்புலிகளால் கொடுக்கப்பட்ட தண்டனைகளே வேறு அவர்களின் நீதி, நிர்வாகம் சரியாகவே இயங்கி வந்தது என்றே கூற வேண்டும். வலுவான சட்டதிட்டங்கள் இந்த நாட்டில் இருந்தும் எவ்வாறு போதைப்பொருட்கள் இந்த நாட்டுக்குள் வருகின்றன. அதற்கு உடந்தையாக கடற்படை மற்றும் விமானப்படை செயற்படும் காரணங்களாக அமைகின்றன. காரணம் இந்த நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதன் பின்னரே போதைப்பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இவற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்க தவறிவிட்டு இந்த நாட்டுக்குள் போதைப்பொருட்களை கொண்டு வந்ததன் பின்னர் நடவடிக்கை எடுப்பதன் ஊடாக போதைப்பொருள் வியாபாரத்தை கட்டுப்படுத்த முடியாது போகும்.

போதைப்பொருள் மாபியாக்கள் பணவலம் பொருந்தியவர்களாக இருப்பதால் எவரையும் விலைகொடுத்து வாங்குமளவிற்கு அல்லது அதனை தடுக்கும் நபரை கொல்லவும் அவர்கள் துணிகரம் கொண்டு பலரை கொலையும் செய்துள்ளார்கள். இந்த நாட்டை



தண்டனையில் இலகுவாக குற்றவாளிகள் தப்பித்துக்கொள்வதனால் தொடர்ந்தும் இலங்கையில் போதைப்பொருள் பாவனை அதிகரிக்க காரணங்களாக அமைகின்றது. அதைவிடவும் மதுக்கடைகள் நாடளாவிய ரீதியில் அதிகரித்து வருகின்றமையினால் குடிபோதைக்கு அடிமையாகி வருகின்ற அடுத்த தலைமுறையையும் காணக்கூடியதாக இருக்கின்றன. குறிப்பாக அரசியல்வாதிகளின் அடிவருடிகளாக செயற்படுகின்ற அல்லது அவர்களின் செல்வாக்கை பயன்படுத்தி அவர்களின் வாகனங்களில் போதைப்பொருளை கடத்தி வருகின்றமை அரச புலனாய்வு அவதானித்து கைது செய்ய வேண்டும்.

உயர் அதிகாரியின் வாகனங்களில் போதைப்பொருட்களை கடத்துவது கண்டறியப்பட்டுள்ளது. பெறுமதிவாய்ந்த வாகனங்களிலும் விஐபி தரத்திலும் போதைப்பொருட்கள் கடத்தப்படுகின்றன. இவற்றை கண்டுபிடிக்க நவீன கருவிகள் தற்பொழுது இருக்கின்றன. இவர்களின் வாகனங்கள் சோதனைக்குட்படுத்துவதன் ஊடாக போதைப்பொருட்களை இலகுவாக பிடிக்கப்படும் நிலைமை இந்த நாட்டில் உருவாக்கப்படும் சட்டம் அனைவருக்கும் ஒன்றே இந்த நாட்டில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் அரச செல்வாக்கை பயன்படுத்தி போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுபவரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. இதில் அப்பாவி பொதுமக்கள் பலிக்கிடாயாவது ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமுடியாததொன்று. மக்கள் முன் தங்களை நல்லவர்களாக முகம் காட்டிகொள்ளும் அரசியல்வாதிகளும் அவர்களின் பிள்ளைகளும் போதைப்பொருள் வியாபாரத்தில் களம் இறங்கி இந்த நாட்டை குட்டிச்சுவராக்கும் நிலைமைக்கு கொண்டு செல்கின்றனர்.

இலங்கையின் கடற்படையும் வான்படையும் கைது செய்கின்றோம் என்ற போர்வையில் கைது செய்து படங்களும் வெளிவிடுகின்றனர் அப்படியிருக்கும் பொழுது தொடர்ந்தும் அந்த மார்க்கமாகவே போதைப்பொருட்கள் கொண்டு வரப்படுகின்றது எனின் தவறு எங்கே நடக்கின்றது. உள்ளூர் போதைப்பொருளாக கஞ்சா மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. கஞ்சா என்பது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தாது பலநாடுகளில் கஞ்சாச் செடிகள் வளர்க்கவும் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. எனவே உடனடியாக அரச செல்வாக்கை பயன்படுத்தி போதை பொருட்களை கடத்துகின்றவர்களை அரசாங்கம் உடன் கைது செய்ய வேண்டும்.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## உள்ளூராட்சிமன்ற தேர்தலும் நாட்டின் பொருளாதார நெருக்கடியும்

இன்றைய நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குள்ளும் உள்ளூராட்சி மன்ற தேர்தலை வைக்கப்போவதான அறிவித்திருக்கின்ற நேரத்தில் ஜனவரி 18 முதல் 21 ஆம் திகதி வரை வேட்புமனுகோரல் நண்பகல் 12 மணி வரை செய்ய முடியும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. இவ்வாறான சூழலில் இலங்கை பொருளாதாரம் என்பது மீறமுடியாத ஒரு நிலைமை காணப்படும் நேரத்தில் அரசியல் கட்சிகள் அரசியல்வாதிகள் இதனை எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றார்கள் என்ற நிலைமையும் தோன்றியுள்ளது. எது எவ்வாறிருப்பினும் உள்ளூராட்சிமன்ற தேர்தல்களில் கட்சிகள் யார் யாரை தெரிவு செய்ய வேண்டும் என்ற விடயங்களை தற்பொழுதே ஆரம்பித்து விட்டனர்.

இந்த நிலையில் அரசாங்கம் எவ்வாறு மக்களின் நிலைமையை புரிந்துகொள்ளாமல் செயற்படுகின்றது என்ற கேள்வியும் மறுபக்கத்தில் எழுப்பப்பட்டிருக்கின்றது. 2017 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான ஒரு சில சட்டதிட்டங்களும் இதிலே உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. அதில் 10 வீதம் பெண்களுக்கான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதும் மிக முக்கியமான ஒரு விடயமாகும். இந்தியாவினுடைய அழுத்தம் காரணமாகவே உள்ளூராட்சி தேர்தல் இடம் பெற வேண்டுமாக மற்றுமொரு தகவல் இருக்கின்றது. எவ்வாறிருப்பினும் 1100 கோடி உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான செலவீனமாக அமையும் எனவும் அரசு அறிவித்திருக்கின்றது. இந்த நிதி எவ்வாறு எங்கிருந்து வரப்போகின்றது என்பதும் மற்றுமொரு கேள்வியாக இருக்கின்றது. மக்களிடமிருந்து அறவிடப்படும் வரித்தொகையில் இருந்தே அரசு பெற்றுக்கொள்ளும் ஒரு நூதனமான நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. அதுபோன்று மின்சார கட்டண உயர்வு. மதுபாவனை மற்றும் சிகரெட் போன்றவற்றின் விலையுயர்வு போன்றவற்றினூடாகவே அரசாங்கம் தற்பொழுது கூடுதலான பணத்தை அறவிடுகின்றது. இதைவிடவும் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியில் தெரிவுசெய்யப்படுகின்ற 8350 க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் அதைவிடவும் போட்டியிடுகின்ற போட்டியாளர்களது எண்ணிக்கையும் இவர்கள் செலவிடப்படுகின்ற பணத்தொகை என்பவற்றைபார்க்கின்றபொழுதுமென்மேலும் தனிநபர் ஒருவர் பெரும் கடன் சுமைக்குள் உள்ளாக்கப்படும் நிலையே உருவாக்கப்படும். உள்ளூராட்சிமன்ற தேர்தல், மாகாணசபை தேர்தல் என அரசு வைக்காது போனால் இதை விடவும் நிலைமை மோசமாகும் என்பதனால் அவசர அவசரமாக உள்ளூராட்சி தேர்தலை அறிவித்திருக்கின்றது.

குறிப்பாக இதிலும் கட்சிகள் தமக்கிடையே மோதிக்கொள்ளுகின்ற ஒரு நிலையும் உருவாகும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. பொருளாதார பிரச்சனை காரணமாக மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்படுவது மட்டுமன்றி ஏற்ற காலகட்டத்திற்குள் அக்கடன்களை மீள செலுத்த முடியாத நிலைமைகளும் உருவாக்கப்படும். குறைந்தபட்சம் 20 ஆயிரம் போட்டியாளர்கள் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட்டாலும் கூட இவர்களின் செலவு என்பது 1000 கோடியை தாண்டும் என்பதிலும் மாற்றுக்கருத்தில்லை. இந்த நிலையில் பொருளாதாரத்தில் பின்னடைவை சந்தித்திருக்கின்ற இலங்கை அரசிற்கு இந்தியா பணம்கொடுத்து உதவி உள்ளூராட்சி தேர்தல் மற்றும் மகாணசபை தேர்தலை வைப்பதன் ஊடாக தனது செல்வாக்கை இலங்கைத்தீவில் செலுத்துகின்ற ஒரு நிலைமை உருவாகும் என்பதிலும் மாற்றுக்கருத்தில்லை.

# 202 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



கடமையை நிறைவேற்றிவிட்டு வேவுக்குழு தமது படைகள் இருக்கின்ற இடத்திற்கு வந்துவிட்டதென்றால் அவ்விடத்தில் எவ்வாறு ரவையறைப் பரிசோதனையை மேற்கொள்வது. வேவுக்காரர்கள் சில நாட்களாக நித்திரையின்றியும் உணவின்றியும் இருந்ததனால் விரல்கள் விறைத்துப்போய் அசையும் திடமற்றவையாக இருக்கும். அத்துடன் பரவல் வரிசையில் நின்று பாதுகாப்பான திசைக்கு ஆயுதங்களை நீட்டவும் முடியாது. ஏனெனில் சுற்றவர ஆயுத தளவாடங்களும் ஆட்களும் இருப்பார்கள். இவ்வாறான நிலைமைகளில் சமர்நிலைப் பரிசோதனை என்றழைக்கப்படும் முறை பயன்படுத்தப்படுகின்றது. வேவுவீரர்கள் (ஒருவரையொருவர் கட்டுப்படுத்தக்கூடியதாக) வட்டமாக நிற்பார்கள். தாழ்ப்பாள் தொகுதி கண் மட்டத்தில் இருக்கக்கூடிய வகையில் சுடுகலன் மேல்நோக்கி உயர்த்திப்பிடிக்கப்படுகின்றது. ரவைக்கூடு கழற்றப்பட்டு கோல்சரினுள் வைக்கப்படுகின்றது. வீரர்கள் 5 - 6 தடவை தாழ்ப்பாள் தொகுதியைப் பின்னோக்கி இழுத்துவிடுகின்றனர். யாராவது ரவைக்கூட்டைக் கழற்றமறந்தால் இது உடனேயே தெரிந்துவிடும். ஏனெனில் தாழ்பாள் தொகுதி ரவையை வெளியே எறிந்துகொண்டிருப்பதுடன் இது உங்களது தோழர்களில் ஒருவரின் முகத்திலும் விழும். இந்த நிலையில் எதிர்பாராத சூடு நடக்குமானாலும் யாருக்கும் தீங்கைத் தராதவண்ணம் குண்டு மேல்நோக்கிச் சென்றுவிடும். இவ்வாறான பரிசோதனையின் பின் ஒவ்வொரு வீரனும் சுயமாகக் கட்டுப்பாட்டுச் சூட்டை (விசைவில்லை அழுத்துதல்) மேற்கொண்டு பாதுகாப்பு நெம்பைப் பாதுகாப்பு நிலையில் விடுவான். ரவைக்கூடு ஆயுதத்துடன் இணைக்கப்படமாட்டாது. ஏனெனில் சமர் நிலைமைகளில் ரவைக்கூட்டை இணைத்து உடனேயே வேகமாக ரவையேற்றும் பழக்கத்தைக் கெடுக்காமலிருப்பதற்காகும். சண்டையின் பிரதான விதிமுறை யாதெனில் ஒருபோதும் ஆயுதத்தை விட்டுப்பிரியக்கூடாது என்பதாகும். எப்பொழுது பாதுகாப்பான பிரதேசத்திற்கு வெளியே செல்கின்றாயோ உடனேயே ஆயுதத்தை எடுத்துக்கொள். ஆயுதத்தை இலகுவாக எடுக்கக்கூடிய வேகமாகச் சூட்டுநிலைக்குக் கொண்டுவரக்கூடிய இடத்தில் எப்பொழுதும் வைத்திரு.

இதுதவிர கட்டளையாளன் பாதைச்சுட்டி ரவைகளைக் கொண்ட - 2 ரவைக்கூடுகளை வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு வீரனும் இவ்வாறான ரவைக்கூடொன்றை வைத்திருப்பதும் விரும்பத்தக்கதாகும். இது மிகவும் அவசியமேற்படுகின்ற சமயங்களுக்கென ஒதுக்கப்படுகின்றதுடன் தனது இருப்பிடத்தைச் சுட்டிக்காட்டித் தெரிவிப்பதற்காகவும் இலக்குச் சுட்டிக்காட்டலுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. கலாஸ்நிக்கவின் ரவைக்கூட்டுப் பூட்டு வேகமாகக் கழற்றி இணைப்பதற்கு வசதியற்றதாகும். ஒருகையால் ஒரேநேரத்தில் ரவையேற்றப்பட்ட ரவைக்கூட்டைப் பிடித்தபடி வெற்று ரவைக்கூட்டைக் கழற்றுவது சாத்தியமற்றதாகும். ஆகவேதான் நெருக்கடியான நிலைமைகளில் ரவைக்கூட்டிலுள்ள ரவைகள் பூரணமாகச் சுட்டு முடியும்வரை காத்திராதீர்கள். ரவைக்கூடு அரைவாசி சுடப்பட்டிருந்து சண்டையின் போது சற்று இடைவெளி கிடைத்தால் ரவைக்கூட்டை மாற்றுங்கள் அரைவாசி பயன்படுத்தப்பட்ட ரவைக்கூட்டை மேலதிகமாக வைத்திருங்கள். ரவைக்கூட்டைப் பொருத்தியபின் தாழ்ப்பாள் தொகுதியை இழுத்து ரவையேற்றுவதற்கான நேரத்தைத் தவிர்ப்பதற்காக ரவைக்கூட்டு ரவை நிரப்பும்போது முதல் மூன்று ரவையையும் பாதைச்சுட்டி ரவைகளாக நிரப்புங்கள். இவ்வாறானால் சுட்டுக்கொண்டிருக்கின்ற போது பாதைச்சுட்டி ரவை செல்வதை அவதானிப்பீர்களானால் இன்னமும் இரண்டு ரவை மாத்திரமே எஞ்சியுள்ளதென்பது உங்களுக்குத் தெரியும். இன்னொரு தடவை சுட்டுவிட்டு வெற்று ரவைக்கூட்டைக் கழற்றி ரவைநிரப்பப்பட்டுள்ள ரவைக்கூட்டை இணைக்கலாம். ரவையறையினுள் ஒரு ரவை இருப்பதால் நீங்கள் ரவையேற்ற வேண்டிய தேவையுமில்லை. வழக்கமாகச் சமர்களின் போது இடையூறு தராமலிருப்பதற்காகவும் ரவை நிரப்பப்பட்ட ரவைக்கூடெதுவென்ற குழப்பமேற்படாமலும் இருப்பதற்காக வெற்று ரவைக்கூடு நிலத்தில் போடப்படுகின்றது. வெற்று ரவைக்கூடு தேவையில்லையென்றால் ரவைக்கூடு மாற்றும்போது காப்பளிப்பைப் பெறுவதற்காக வெற்று ரவைக்கூட்டைக் குண்டைப்போல எதிரிமீது எறியலாம். கைச்சண்டைகளின் போதும் எதிரியின் முகத்தை நோக்கி வெற்று ரவைக்கூட்டால் எறியலாம். சற்றுப் பயிற்சி செய்தால் ரவைக்கூட்டின் விளிம்புப் பகுதி எதிரியின் உச்சந்தலையில் அல்லது பக்கத்தலைகளில் படும்படியும் எறியலாம். எறி பலமாக இருக்குமானால் அது எதிரியைச் செயற்பட முடியாதவனாக ஆக்கிவிடும்.

படைப்பிரிவின் ஆளணியைச் சோடிகளாகப் பிரிக்காமல் மூன்றுபேர் கொண்ட சண்டை உப அணிகளாகப் பிரிப்பது விரும்பத்தக்கது. இயந்திரச் சுடுகலனாளர்கள் ஆர்.பி.ஜிக்காரர்கள் ஏ.ஜி.எஸ் காரர்கள் போன்றோருடன் மேலதிகமாக இன்னொருவனைச் சேர்த்துக்கொள்வதாகும். மூன்று வீரர்களால் ஒருங்கிணைந்து செயற்படுவது இலகுவாகும். ஒருவன் காயப்படுமிடத்து மற்றைய இருவராலும் அவனைச் சமர்க் களத்திலிருந்து வெளியே எடுத்துவரக்கூடியதாக இருக்கும் யாராவது ஒருவனிடத்தில் சுடும்போது இயங்குநிலைத் தடையேற்பட்டால் (சீரின்மையால் அல்லது ரவையேற்றும்போது) இருவரால் இலகுவாக அவனுக்குக் காப்பு வழங்க முடியும் (இச்சூழ்நிலையில் 'காப்பளி' என்ற சைகை வழங்கப்படுகின்றதுடன் காப்பளிக்கின்றவர்கள் 'தருகின்றேன்' எனப் பதிலளிக்கவும் வேண்டும்.) குறோஸ்னிச் சமர்க்காலங்களில் முகட்டு அறைகள், நிலக்கீழ் அறைகள், பிற தங்கிடங்கள் போன்றவற்றை அடிக்கடி சோதனையிடவேண்டியிருந்தது. இதன் போது அடிக்கடி இருட்டில் தேடுதல் மேற்கொள்ளவேண்டியதாயிற்று.

விம்பச் செறிவாக்க ரசிய இரவுப் பார்வைச் சாதனங்கள் (மேற்குறித்த) தங்கிடங்களில் பயன்படுத்துவதற்குப் பொருத்தமற்றவையாகும். மாபெரும் தேசபக்தப் போரின்போது சோவியத் படைவீரர்கள் பின்வரும் வழியைப் பயன்படுத்தினார்கள். (பழையகால) வாகனங்களின் மேற்பகுதியை மூடுவதற்குரிய இறப்பர்ப் படங்கிலிருந்து வெட்டப்பட்ட துண்டினால் சாதாரண மின்சூளைச் சுத்திப் பொதிசெய்தனர். இருட்டான இடங்களில் தேடுதல் மேற்கொள்கின்றபோது அல்லது நிலவறை கழிவுநீர்க் குழாய் சுரங்கப்பாதை போன்றவாறான இடங்களில் சமரிடும்போது வீரர்கள் இந்த 'அடியெதிர்ப்பு' மின்சூளை ஒளிரச்செய்து எதிரி இருக்கக்கூடிய இடத்திற்கு எறிந்தனர். இந்த முறையில் அவர்கள் இலக்கை ஒளியூட்டி குறிபொருத்திய சூட்டை மேற்கொள்வதற்குரிய வாய்ப்பைப் பெற்றார்கள். என்.எஸ்.பி.யு - 1 மற்றும் 2 வகையைச் சேர்ந்த இரவு ஒளியியல் குறிகாட்டிகள் பற்றிச் சிறிது கூறுகின்றேன். இந்தக் கருவிகள் இயங்குநிலைக்கான ஆளியை அழுத்திய உடனேயே இயங்க மாட்டாது என்பதனைக் கருத்திலெடுத்துக்கொள்ள வேண்டும். குளிர்காலங்களில் 1 தொடக்கம் 2 நிமிடம் வரை அவை இயங்கல் நிலைக்கு வரத் தேவையாகவிருக்கின்றது.

ஆனால் ஆளியை அழுத்தியதும் இவ்வகைக் கருவிகளின் பார்வைப் பகுதியில் பச்சை நிறத்திலான தெறிப்பு வெளிச்சம் ஒன்று ஒளிரத் தொடங்கிவிடும். இது எதிரியின் அவதானிப்பாளர்களுக்கும் பதுங்கிச் சுடுபவர்களுக்கும் உங்களது அமைவிடத்தைக் காட்டிக்கொடுத்துவிடும். ஆகவே தான் ஆளியை அழுத்திய பின்னரும் பார்வைப் பகுதியிலிருந்து கண்ணை விடுவித்ததும் உடனேயே பார்வைப் பகுதியைக் கைகளால் பொத்திக்கொள்ளுங்கள் அல்லது இதற்கான சிறப்புத் திரைச்சீலையால் மூடிவிடுங்கள். இந்த உபகரணங்கள் திறந்த ஒளி மூலங்களால் இலகுவில் பாதிப்படைந்துவிடுகின்றன. இவ்வாறான சம்பவமொன்று உள்ளது. செச்னியாவின் கம்சமோல்ஸ்கயா கிராமப் பகுதியில் எங்களது வேவுக்குழு நெருப்பொன்றிற்கு அருகிலிருந்த போராளிகளை அவதானித்துக்கொண்டிருந்தது.

வேவுகாரர்கள் நீண்ட நேரமாக இரவுப் பார்வைச் சாதனத்தின் மூலம் அவதானித்தார்கள். ஆனால் அந்த நெருப்பிற்கு அருகில் சூட்டு நிலைகளாலும் கணிசமான அளவு படைகளாலும் ஆயுதங்களாலும் பலப்படுத்தப்பட்ட பூரண முகாமொன்று இருப்பதனைக் கண்டுகொள்ள முடியவில்லை. நெருப்பின் வெளிச்சம் கருவியின் திரையில் மூடியவாறு அவதானிப்பிற்குத் தடையாவிருந்தது. தாக்குதலைத் தொடங்கிய குழு விளைவாக எதிரியின் விஞ்சிய படைகளின் எதிர்த்தாக்குதலுக்குள் அகப்பட்டது. ஜி.பி - 25 சுடுகலனின்கீழ் பொருத்துகின்ற எறிகணை செலுத்தியால் சுடுவதற்கான சிறிய தந்திரங்கள் இருக்கின்றன. இதனது விசைவில் சற்றுத் தொலைவிலிருக்கின்றபடியால் வலதுகையால் விசைவில்லை அழுத்துவது வசதியற்றதாகவுள்ளது. சுடும்பொழுது மிக வசதியாக இருப்பதற்காகத் தோள்மூட்டில் சுடுகலனடியைப் பொருத்தாமல் சுடுகலனின் கைபிடியைப் பொருத்துங்கள். குறிப்பாகப்படுத்தநிலையில் சுடும்போது இந்த முறை வசதியாகவிருக்கின்றது. மறைமுகச்சூட்டை மேற்கொள்ளும்போது சுடுகலனடியைத் தரையில் ஊன்றுங்கள். இந்நிலையில் எறிகணையைச் செலுத்தியின் குழாயினுள் உதவியாளனே வைக்க வேண்டும். சுடுபவர் சுடுகலனின் நிலையைக் கவனித்து நினைவில் கொள்வார். முதல் சூட்டின் பின் எங்கு சுவாலை தெரிந்தது என்பதை அடிப்படையாகக் கொண்டு சூட்டுத் திருத்தத்தை மேற்கொள்வார். (நகர்ச் சண்டையின்போது ஜி.பி - 25 இனால் சூடு மேற்கொள்ளப்பட்டு எறிகணை பறக்கத் தொடங்கி 10 - 20 மீற்றர் கடந்தபின் அது வெடிக்கத் தயாராகிவிடும் என்பதனை மறந்துவிடாதீர்கள். குறைந்த தூரத்திலிருந்து கட்டடச் சாளரத்திற்குச் சுடும்போது எறிகணை வெடிக்காமலிருக்கலாம்.) சமர்க்களத்திலும் சூட்டுத் திடலிலும் நகர்கின்றபோது சூட்டாளர்கள் ஆயுதத்தை வயிற்று மட்டத்தில் சுடுகுழலை முன் நீட்டியபடியே வழக்கமாகப் பிடிக்கின்றார்கள்.

தொடர்வான்....



சுழியோடி

# சீனா, அமெரிக்கா, இந்தியா புலனாய்வாளர்களின் ஊடுருவலே இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணம்

சர்வதேச பூகோள அரசியலை ஒப்பிடுவோமாக இருந்தால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை நசுக்குவதற்கான நடவடிக்கைகளில் ஒன்று தான் உலக அரசியல் ,ராஜதந்திரம் ‘World Political Diplomacy' என்பதாகும். இன்றைய இலங்கையின் அரசியல் சூழ்நிலையை எடுத்துக்கொண்டால் சர்வதேச நாடுகளின் காலணித்துவத்தை இலங்கையில் நிலைநாட்டுவதேயாகும். இலங்கை நாட்டின் புலனாய்வு கட்டமைப்பு என்பது சர்வதேச புலனாய்வு கட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டதன் மற்றுமொரு நிலையே இந்த நாடு என்றும் கண்டிராத பொருளாதார வீழ்ச்சியை அடைந்துள்ளமையாகும். இலங்கையின் புலனாய்வு கட்டமைப்பு இன்று பெரும் அதிர்ச்சியில் அமிழ்ந்துபோயுள்ளது. சர்தேச ரீதியில்கூட குற்றஞ்செய்யும் இலங்கையர்களை கைது செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளமை கவலைக்குரிய விடயம். ஒரு நாட்டின் புலனாய்வு கட்டமைப்பானது சீராக இயங்குமாக இருந்தால் மட்டுமே அந்த நாடு பொருளாதார ரீதியிலும் ஏனைய பௌதீக வளங்களிலும் முன்னேற்றமடைந்து செல்லும். இலங்கையில் இருக்கக்கூடிய புலனாய்வு கட்டமைப்பான NIB, TID,CID என்பன தமது அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்த முடியாமல் போனமையே இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் மற்றும் அறகள போராட்டத்தின் பொழுது அமைச்சர்களுடைய 40 க்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டமை ஜனாதிபதி மாளிகை, பிரதமர் செயலகம், பாராளுமன்ற வளாகம் போன்றவை அனைத்தும் சுற்றிவளைக்கப்பட்டு தாக்கப்பட்ட விவகாரம் என்பன புலனாய்வாளர்களால் கண்டறியப்படமுடியாத அளவிற்கு இலங்கையின் புலனாய்வு கட்டமைப்பு பின்தங்கிய ஒரு நிலையை அடைந்ததன் மற்றுமொரு வெளிப்பாடே சர்வதேச புலனாய்வு கட்டமைப்புக்கள் இலங்கையில் ஊடுருவக்காரணமாக அமைந்தது.

எனவே அந்த வகையில் பார்த்தால் இந்தியாவால் அன்பளிப்பாக கையளிக்கப்பட்ட சமுத்திர கண்காணிப்பு விமானமான "டோனியர் 228" ரக விமானம் இந்திய சுதந்திர தினத்தின் 75வது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த விமானம் இலங்கைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இந்த டோனியர் ரக விமானத்தின் மூலம், இலத்திரனியல் போர் நடவடிக்கைகள், சமுத்திர கண்காணிப்புமற்றும் அனர்த்த நிலைமைகளுக்கான பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்படுகின்றது. இந்த விமானம் கையளிக்கப்பட்டமை தொடர்பில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் கருத்து ஒன்றை வெளியிட்டிருந்தது. "இந்தியாவுடனான ஒத்துழைப்பினால் ஏனைய துறைகளில் கிடைக்கப்பெற்ற பலன்களைப் போலவே, இலங்கை விமானப்படைக்கு டோனியர் பரிசளிக்கப்பட்டமையும் முக்கியமானதாக காணப்படுவதுடன், கடல் பாதுகாப்பு குறித்த தேவைகளை இலங்கை நிவர்த்தி செய்வதற்கான ஒரு படியாகவும் கருதப்படுகின்றது. வங்காள விரிகுடா மற்றும் இந்துசமுத்திர பிராந்தியங்களிலுள்ள, இலங்கை போன்ற அயல் மற்றும் நட்பு நாடுகளின் பலத்தினை வலுவாக்குவதிலும் இந்தியாவின் வல்லமை உறுதுணையாக நிற்கின்றமைக்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்." என இந்திய உயர்ஸ்தானிகராலயம் டுவிட்டர்பதிவொன்றின் ஊடாக தகவல் வெளியிட்டிருந்தது.

**டோனியர் விமானத்தின் வசதிகள் என்ன?**

**இரண்டு டர்போபாப் எஞ்சின்களை இரண்டு இறக்கைகளிலும் கொண்டுள்ளது டோனியர் ஆர்288 ரக விமானம். குறைந்த எரிபொருள் பயன்பாடு, குறுகிய தூரத்திலேயே மேலெழும்பும் வசதி, தரையிறங்கும் திறனை இது பெற்றுள்ளது. பகுதியளவு தயாரான ஓடுபாதையில் கூட இந்த விமானத்தால் தரையிறங்கி மேலெழும்ப முடியும்.**

**இந்த விமானத்தில் இரு விமானிகள் பயணம் செய்யலாம். அதே சமயம், அதன் கட்டுப்பாட்டை தனியாகவும் ஒருவரால் மேற்கொள்ள முடியும். எனினும், பொதுவாக இதை இருவர் இயக்குவதே வழக்கில் உள்ளது.**

**இதன்மேலெழும்பும்எடை 6,400 கிலோவாகும், அதேபோல தரையிறங்கும்போது 5,900 கிலோ எடையாக இருக்கும்.**

**இரு பக்க இறக்கைகளிலும் 2 நான்கு முனை பிளேடுகள் அதன் ப்ரொப்பெல்லர்களில் உள்ளன. ஒவ்வொரு இறக்கையிலும் மூன்று ஒருங்கிணைந்த எரிபொருள் கலன்கள் பொருத்தப்பட்டுள்ளன. மொத்த எரிபொருள் தாங்கு திறன் 2,850 லிட்டர்கள் ஆகும். இரண்டு இறக்கைகளில் உள்ள எரிபொருள் கலன்களும் இணைக்கும் வகையில் இதன் வடிவம் உள்ளது.**

**இந்த விமானத்தின் மொத்த நீளம் 54 அடி 4 அங்குலம். உயரம் 15 அடி 11 அங்குலம். இதன் தரையிறங்கும் கியர்கள், ஹைட்ராலிக் முறையிலானது. 28 வோல்ட் மின்சாரமும் 300 ஆம்புகள் டிசி மின்சாரமும் இதன் இயக்கத்துக்கு தேவைப்படும்.**

**அதிகபட்ச வெப்பநிலை +55 டிகிரியிலும் குறைந்தபட்சம் -40 டிகிரியிலும் இந்த விமானம் எந்த பிரச்னையுமின்றி இயங்கும் திறனைக் கொண்டிருக்கிறது.**

**இவ்வாறான வசதிகளை கொண்டதாக இந்தியாவினால் வழங்கப்பட்ட சமுத்திர கண்காணிப்பு விமானமான "டோனியர் 228" ரக விமானம் காணப்படுவது குறிப்பிடதக்கவிடயமாகும்.**

இலங்கையில் இடம்பெறுகின்ற நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு இந்தியாவினால் வழங்கப்பட்டது தான் இந்த டோனியர் 228 ரக விமானம் என்பது குறிப்பிடத்தக்கது. தமக்கு இலாபகரமாக இதை இந்திய அரசு வழங்கியிருக்கின்றது என இலங்கை அரசு கருதினாலும் உண்மை நிலை அதுவே. அதே போன்றே சீனாவின் யுவான் வாங் 5 என்ற கப்பலின் வருகையும் காணப்படுகின்றது. இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி சீனாவுக்கு சொந்தமான சர்ச்சைக்குரிய விண்வெளி ஆய்வுக் கப்பலான யுவான் வாங்-5 2022 ஆகஸ்ட் 16ஆம் திகதி. இலங்கை ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்திருந்தது. யுவான் வாங் - 5 கப்பலில் இருந்தவாறு 750 கிலோ மீட்டர் தூரம் வரையிலான இடங்களை கண்காணிக்க முடியும் என கூறப்படுகிறது. அப்படியென்றால் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்தபடியே, இந்தியாவின் மிக முக்கியமான கேந்திர நிலையங்களை இந்த கப்பல் உளவு பார்க்கும் என்பது இந்தியாவின் புகாராக இருந்தது. அது மட்டுமன்றி சீனா அரசு தமது புலனாய்வு நடவடிக்கைக்காக இலங்கையின் போர்ட்சிட்டி. மற்றும் தாமரைத் தடாகம் போன்றவற்றிலிருந்து சட்லைட் தொழினுட்பத்தினூடாக தகவல் தொழினுட்பங்களை துல்லியமாக கண்டுபிடிப்பதற்காகவே அதனை அமைத்துள்ளது. இலங்கையில் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சி கண்ட நிலையில் போர்ட் சிற்றியினூடாக இலங்கையின் வர்த்தகத்தை அதிகரிக்கமுடியும் என்ற நப்பாசையில் இலங்கை அரசு இருந்தாலும்கூட அதற்கு மாறாக வளங்களையும் நிலங்களையும் சுரண்டும் நோக்கில் சீன அரசு இலங்கையில் தீவிரமாக தனது புலனாய்வு கட்டமைப்புக்களை உள்நகர்த்தி செயற்படுகின்றது. இதில் பணிபுரியும் 1400 சீன புலனாய்வு படை வீரர்கள் களமிறக்கப்பட்டிருப்பது கண்டரியப்பட்டுள்ளது. ஆனாலும் சீனாவை எதிர்ப்பதற்கு முடியாத ஒரு நிலையே இலங்கை அரசாங்கம் திண்டாடிவருகின்றது. கடந்த மகிந்த ராஜபக்சவின் அரசாங்கமே சீன அரசாங்கத்துடன் பாரிய நட்புறவை கொண்டிருந்தது. அதன் அடுத்த கட்டமாகவே தமது புலனாய்வு கட்டமைப்பையும் நிரந்தரமாக இலங்கையில் கால்பதித்தது.

சீனாவின் அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கையில் இருந்து அப்புறப்படுத்த வேண்டுமாக இந்திய புலனாய்வான CBI வலியுறுத்திய போதும் அது முடியாமல் போயுள்ளது. அதுமட்டுமன்றி அறகள போராட்டம் மகிந்த குடும்பத்திற்கு எதிராக இந்திய அரசால் திட்டமிட்டு நடத்தப்பட்டது ஒன்று. அதனூடாக ஓரளவு மாற்றத்தை மட்டுமே கொண்டுவர இந்தியாவால் முடிந்தது. இந்தியா எதிர்பார்த்தபடி சீன கட்டமைப்புக்களை இலங்கையில் இருந்து அகற்றுவதற்கு முடியாமல் போயுள்ளமை மற்றுமொரு பாரிய சிக்கலை இந்த நாட்டில் உருவாக்கியுள்ளது. இந்தியா சீனா ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும் என்று எடுத்துக்கொண்ட முயற்சிகளை விடவும் அமெரிக்கா ஒருபடி முன்னே சென்று தனது கடற்படை கலன் ஒன்றை இலங்கை நாட்டிற்கு அனுப்பியது. இதனூடாக ஒரு நட்புறவை ஏற்படுத்துகின்றோம் என்ற செயற்பாடு வெளிப்படையாக இருக்க சீன இந்திய புலனாய்வுகளையும் இலங்கை நாட்டு புலனாய்வையும்கண்காணிப்பதற்கு அமெரிக்க கடற்படை கலன் இலங்கையில் வந்திறங்கியது என்பதே யதார்த்தபூர்வமான விடயம். இக்கப்பலின் வருகையை பார்க்கின்ற பொழுது குறிப்பாக அமெரிக்காவின் சொகுசு கப்பலான அசாமரா க்வேஸ்ட் 600 சுற்றுலாப்பயணிகள் மற்றும் 400 பணியாளர்களுடன் 03 ஆம் திகதி சனிக்கிழமை இரவு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. 03 ஆம் திகதி கொழும்பில் நங்கூரமிடப்பட்டிருந்த இக்கப்பல் அன்று (2022.12.04) திங்கட்கிழமை அம்பாந்தோட்டை துறைமுகத்தை சென்றடைந்தது. கடந்த ஒரு மாத காலத்திற்குள் இலங்கைக்கு வருகை தந்துள்ள மூன்றாவது சொகுசு சுற்றுலாப்பயணக்கப்பல் இதுவாகும்.கடந்த நவம்பர் 29 ஆம் திகதி உலகின் அதி சொகுசு கப்பலான "மெய்ன் சிஃப் 5" கப்பல் 2014 சுற்றுலாப்பயணிகள் மற்றும் 922 பணியாளர்களுடன் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. இதே வேளை 2022 நவம்பர் 18 ஆம் திகதி அமெரிக்காவின் "வைக்கிங் மார்ஸ்" என்ற சொகுசு பயணிகள் கப்பல் 900 பயணிகளுடன் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்திருந்த அதே நேரம் சர்வதேச ரீதியாக தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் இலங்கையில் இடம்பெற்றுக்கொண்டிருந்த காலத்தில் இலங்கைத் தீவிற்குள் எந்தவொரு நாட்டினுடைய கப்பல்களும் சென்று வருவதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. பாகிஸ்தான் நாட்டின் ஜெட்லைனர் என்ற கடற்படை கலன்களை மட்டும் போர்க்காலத்தில் வழங்கியிருந்தது.

இலங்கை அரசிற்கு இக்காலகட்டத்தில் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தை அடைந்தநிலையில் சர்வதேச ரீதியாக தமிழீழ விடுதலைப்புலிகள் தமது கடற்படை கலன்களை மிகப்பலமாக நகர்த்தி வந்தார்கள். அதனூடாக இலங்கைத்தீவில் தமது புலனாய்வு கட்டமைப்பை மேற்கொள்ள முடியாத ஒரு நிலை உருவாக்கப்பட்டதை அறிந்த சீனா இந்தியா அமெரிக்கா போன்ற நாடுகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படை 8 கப்பல்களை சர்வதேச கடற்பரப்பில் வைத்து தாக்கயளித்தனர். அது எவ்வாறெனில் சீனா இந்தியா அமெரிக்கா போன்ற நாடுகள் மிக துல்லியமான தகவல்களை இலங்கையின் கடற்படைக்கு வழங்கியமையாகும். சர்வதேச ரீதியாகவிடுதலைப்புலிகளின்வர்த்தகவணிகம் ஆயுத கடத்தல் போன்றவை இடம்பெற்று வந்தமை இதனை கட்டுப்படுத்தினால் மட்டுமே தாம் இந்த நாட்டுக்குள் நிரந்தரமாக ஊடுருவி தமது புலனாய்வு கட்டமைப்பை மேற்கொள்ள முடியும் என்ற இறுதித் தீர்மானத்துடன் ஈழப்போரின் இறுதிக்கட்ட போராட்டமும் 2009 ஆம் ஆண்டு சர்வதேச நாட்டின் உதவியோடு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. அப்பொழுது இந்த நாட்டுக்குள் ஒரு இனப்படுகொலை இடம்பெற்றது என்று அமெரிக்காவும் இந்தியாவும் அடிக்கடி கூறி வந்தன. காரணம் மகிந்தவை ஒரு சர்வதேச குற்றவாளி என்றும் அவரை தூக்கில் இடவேண்டும் என்றும் மும்முரமாக இந்த நாடுகள் நின்றதன் காரணம் இவர்களை மிரட்டி இந்த நாட்டிற்குள் தங்குதடையின்றி தமது புலனாய்வு கட்டமைப்புக்களை மேற்கொள்வதற்கே. குறிப்பாக பூகோள ரீதியாக உலக மகா யுத்தம் ஏற்பட்டால் அதனை எதிர்கொள்ள இலங்கையில் திருகோணமலை துறைமுகம் மிகவும் பாதுகாப்பான ஒன்றாக இயற்கையாக அமைந்துள்ளமை அதன் சிறப்பம்சமாகும். ஆயிரக்கணக்கான கடற்தாங்கிகளை, கப்பல்களை ஒரே தடவையில் நிறுத்தி யுத்தம் செய்யக்கூடிய ஒரு தளத்தை கொண்டிருக்கின்றது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது திருகோணமலை கடற்பரப்பில் வைத்து ஜப்பானிய விமான தாக்குதல் மூலம் தாக்கியழிக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்ட எஸ்.எஸ். சகயிங் (SS Sagaing) கப்பல் இல் இறந்தவர்களின் சமாதிகள் இன்றும் திருகோணமலை கடற்கரையை அண்மித்த பகுதியில் நினைவுத்தூபிகளாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இலங்கைத்தீவு என்பது போரியல் வரலாற்றில் பாரிய அரண்களை கொண்டு திகழும் ஒரு நாடு என்பதனால் அந்த நாட்டிற்குள் தமது புலனாய்வு கட்டமைப்புக்களை மேற்கொள்வதற்காக குறித்த நாடுகள் தீவிரம் காட்டுகின்றன. இந்த நாடுகளின் புலனாய்வு ஊடுருவலே இன்றைய பொருளாதார வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்திருக்கின்றது என்று கூறலாம். எனவே சர்வதேச புலனாய்வுகளிடமிருந்து எமது நாட்டை பாதுகாத்துக்கொள்வதற்கு இங்கிருக்கின்ற சர்வதேச புலனாய்வு கட்டமைப்புக்களை ஏதோவொரு வகையில் வெளியேற்ற வேண்டும் என்பதே இன்றைய நிலைப்பாடு.

# நல்லிணக்கப் பொறிமுறை தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுக்கொடுக்குமா?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) செப்டெம்பர் அமர்வுக்கு சற்று முந்திய காலப் பிரிவின் போது உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை ஒன்றை (TRC) ஸ்தாபிப்பதற்கான யோசனை ஒன்றை இலங்கை அரசாங்கம் முன்வைத்திருந்தது. அரசாங்கம் சரியாக ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தக் கடப்பாட்டை மேற்கொண்டிருந்த நிலையில் ஒரு விதத்தில் இது ஒரு புதிய விடயமாக இருந்து வரவில்லை. உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் 30/1 இன் ஒரு பாகமாக இலங்கை அரசாங்கம் ஏற்கனவே இணங்கியிருக்கும் நிலைமாறு கால நீதி மற்றும் மனித உரிமைகள் என்பன தொடர்பான பல வழிமுறைகளில் ஒன்றாகும். இலங்கை 2015 செப்டெம்பர் மாதம் இந்தத் தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியது.

நீண்டகாலமாக தீர்த்து வைக்கப்படாதிருக்கும் மனக்குறைகளைக் கவனத்தில் எடுப்பதற்கென உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவது பெருமளவுக்கு சவால் மிக்க ஒரு பணியாகும். மிக மோசமாக நேரடியாக பாதிக்கப்பட்டிருப்பவர்களின் திட்டவட்டமான தேவைகள் மற்றும் அபிலாசைகள் என்பவற்றை சரிவர அறிந்து. சமூகங்களுக்கு இடையில் ஏற்றுக்கொள்ளும் தன்மை மற்றும் புரிந்துணர்வு என்பவற்றை ஏற்படுத்துவதுடன் இது சம்பந்தப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் வாதிடப்படும் விதத்தில், இந்தப் பொறிமுறையின் வடிவமைப்பு மற்றும் அது செயல்படும் விதத்தை எடுத்துக் காட்டும் திட்டத்தின் தயாரிப்பு என்பவற்றை இயலச் செய்வதற்கென கலந்தாலோசனை அணுகுமுறை ஒன்றை பின்பற்றுவது இச்செயற்பாட்டின் ஒரு முதன்மையான கருவியாக இருந்து வரும்.

**நல்லிணக்கப் பொறிமுறைகள் தொடர்பான கலந்தாலோசனை செயலணி (CTF)**

இது தொடர்பாக நல்லிணக்கப் பொறிமுறைகள் தொடர்பான கலந்தாலோசனை செயலணியின் அறிக்கைகள் இதற்கான சிந்தனைக்கு ஒரு பயனுள்ளதுவக்கப் புள்ளியை வழங்குகின்றன. பொது மக்களின் கருத்துக்களை குறிப்பாக பாதிக்கப்பட்டவர்களின் கருத்துக்களை கண்டறிந்து கொள்வதற்கென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அரசாங்கத்தினால் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஸ்தாபிக்கப்பட்டது. பரிந்துரைகளை சேகரிப்பதற்கென CTF செயலணி பல முறைமைகளைப்பயன்படுத்தியது. 15 உள்ளூர் வலயக் கமிட்டிகள் உருவாக்கப்பட்டமை அதன் முக்கியமான கருவிகளில் ஒன்றாகும். இக்கமிட்டிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுக் கூட்டங்களை நடத்தியதுடன். பாதிக்கப்பட்டவர்களின் திட்டவட்டமான பிரிவினருடன் இலக்குக்குழு கலந்துரையாடல்களையும் நடத்தியது. இது உயரளவிலான பிரதிநிதித்துவம் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் ஆகிய தரப்புக்களை உள்வாங்குதல் என்பவற்றில் கணிசமான ஒரு சாதனையை எடுத்துக் காட்டியது. வன்முறை மற்றும் நாட்டில் இடம்பெற்ற பாரிய அளவிலான மோதல்கள் என்பவற்றின் விளைவாகத் தோன்றி மிக மோசமான பாதிப்புக்களுக்கு எதிர்வினையாற்றுவதற்கான இலங்கை அரசின் முயற்சிகளை இது எடுத்துக் காட்டியது. எவ்வாறிருப்பினும், இச்செயலணியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கண்ணோட்டங்கள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றை போதியளவில் பரிசீலனை செய்வதற்கு ஒன்றன் பின் ஒன்றாக வந்த அரசாங்கங்கள் தவறியிருக்கும் விடயம், அண்மைய வருடங்களில் ஸ்தாபிக்கப்பட்ட நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகள் மீதான பொது மக்களின் நம்பிக்கையை மேலும் சீர்குலைத்துள்ளது.

இறுதி அறிக்கையில் உள்ளக்கப்பட்டிருக்கும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (TRC) தொடர்பான அத்தியாயம், பொது மக்களால் எழுப்பப்பட்டிருந்த பன்முகப்பட்ட கண்ணோட்டங்களைத் தொகுத்து முன்வைத்திருந்தது. இவை இத்தகைய ஆணைக்குழுவொன்றின் ஆணையாளர்கள் மற்றும் ஆளணியினர் ஆகியோருக்குத் தேவைப்படும் திறன் தொகுதி மற்றும் அனுபவங்கள் என்பன தொடக்கம் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் மற்றும் மோதல்கள் என்பன வரையில் பரந்த வீச்சில் இருந்து வந்தன. ஒரு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு எவ்வாறு செயற்பட வேண்டும், அத்தகைய ஒரு ஆணைக்குழு செய்றபட முடியுமா என்ற கண்ணோட்டத்தில் ஊடாக சிந்திப்பவர்களுக்கு முக்கியமான கண்ணோட்டங்களை இது வழங்கியது. இந்தக் கட்டுரையில் மிக முக்கியமான ஒரு கேள்வி தொடர்பாக நான் கவனம் செலுத்துகிறேன். "உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை ஸ்தாபிப்பதன் நோக்கம் என்ன?" உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான சட்ட மூலம் அடுத்து வரும் மாதங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்தால், அத்தகைய ஒரு பொறிமுறை ஏன் தேவைப்படும் மற்றும் அது எவ்வாறு செயற்பட முடியும் என்பது குறித்து விவாதிப்பதும், சிந்திப்பதும் முக்கியமாகும். உண்மை மற்றும் நல்லிணிக்க செயலணியின் அறிக்கைகளிலிருந்து விடயங்களைப் பெற்றுக் கொள்ளும் அதே வேளையில், CTF செயன்முறையின் ஒரு பாகமாக இருந்து வந்த பொது மக்களுடனான சந்திப்புக்கள் குறித்த எனது சொந்த அவதானிப்புக்களையும் நான் முன்வைக்கின்றேன். இந்தச் செயன்முறையில் நானும் சம்பந்தப்பட்டிருந்ததுடன். மனித உரிமை மீறல்களை எதிர்கொண்டிருந்தவர்களுடன் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தேன்.

**TRC மாதிரியின் பொருத்தப்பாடு**

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முறை பற்றி 1990களில் உலகளாவிய ஒரு தோற்றப்பாடு உருவாகியது. பாரியளவிலான மோதல்கள் மற்றும் அல்லது இராணுவ ஆட்சிகள் என்பவற்றிலிருந்து மீண்டு வரும் நிலைமாறு கால சமூகங்களில் இந்நிலைமை காணப்பட்டது. இலத்தீன் அமெரிக்காவே உயரளவிலான TRC வகை கட்டமைப்புக்களை கொண்டிருந்த பிராந்தியமாக இருந்து வந்தது. எனினும், தென்னாபிரிக்காவே இந்த வகையைச் சேர்ந்த பொறிமுறைக்கான மிகச் சிறந்த குறியீடாக உள்ளது. எவ்வாறிருப்பினும், தென்னாபிரிக்க உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு செயற்பட்ட விதம் மற்றும் அது உதாசீனம் செய்திருந்த விடயங்கள் என்பன தொடர்பாக கணிசமான அளவில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும். பாரியளவிலான அத்துமீறல்கள் நீதித் துறையையும் மேவிச் சென்றிருக்கும் பின்புலங்களில் நிலைமாறு கால நீதிக் கருவிப் பொதியின் முதன்மையான ஒரு கூறாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மாதிரி நோக்கப்படுகிறது. ஆழமாக வேரூன்றியிருக்கும் மனக்குறைகள் பிளவுண்ட ஓர் அரசியல் முறைமை உதாசீனம் செய்யப்படுகின்றன சமூகத்தில் நிலவி வரும் பாரிய பிளவுகள் நிச்சயமற்ற நிலை மற்றும் எதிர்கால வன்முறை என்பன மீண்டும் இடம்பெறும் அச்சுறுத்தலை எடுத்து வருகின்றன. பல்வேறு வகைகளைச் சேர்ந்த மோதல்களையும், வேறுபட்ட விளைவுகளை எதிர்கொண்டிருக்கும் சமூகங்களையும் கவனத்தில் எடுப்பதற்கென பன்முகப் பின்புலங்களில் TRC மாதிரி பின்பற்றப்பட்டுள்ளது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றின் அடிப்படை நோக்கம் அதன் அமர்வுகளுக்கு ஊடாக உண்மையை கண்டறிவதாகும். இந்த அமர்வுகளில் பாதிக்கப்பட்டவர்கள், சமூகத் தலைவர்கள் மட்டுமன்றி குற்றம்சாட்டப்பட்டிருக்கும் குற்றச் செயல்களை நிகழ்த்தியவர்களும் கூட சான்றுகளை முன்வைக்கிறார்கள் அது 'உண்மைகளை' மக்கள் பகிரங்கமாக செவிமடுத்து, அங்கீகரிப்பதற்கும் (அத்துமீறல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களை குறிப்பிட்டு, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்களின் பட்டியல்களுடன்) பிரசுரிக்கப்பட வேண்டிய ஓர் இறுதி அறிக்கையை தயாரிப்பதற்கும் வாய்ப்பளிக்கின்றது. இந்த இறுதி அறிக்கை அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பான பரிந்துரைகளை கொண்டிருக்கும். ஒவ்வொரு பின்புலத்திலும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்களின் பணிப்பாணைகள் மற்றும் அணுகுமுறைகள் என்பன வேறுபட முடியும். ஆனால், இந்த ஆணைக்குழுக்களின் ஒட்டுமொத்த செயற்பாட்டு அனுமானம், திட்டவட்டமான குற்றச் செயல்கள் மற்றும் அத்துமீறல்கள் என்பன தொடர்பான விசாரணைகளும், உண்மையை கூறுவதும் வரலாற்று ரீதியான தெளிவுபடுத்தல், புரிந்துணர்வு, குணப்படுத்தல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்த முடியும் என்பதாகும்.

இந்த மாதிரி பரந்த வீச்சிலான காரணங்களின் அடிப்படையில் விமர்சிக்கப்பட்டு வந்துள்ளது. நீதியுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டுமென அது கேட்டுக் கொள்வதனையும் இது உள்ளடக்குகின்றது. உண்மையைக் கூறுவதற்கு பதிலாக பாரதூரமான மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியிருப்பவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும் போது குறிப்பாக இத்தகைய விமர்சனங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதாவது. விசாரணை நடத்தி. அத்தகைய குற்றச் செயல்களுக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்க வேண்டும் என்ற விதத்தில் அரசுகள் கொண்டிருக்கும் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுக்கு இது முரணானதாக இருக்கின்றது எனக் கூறப்படுகின்றது. தனிப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்கள் திட்டவட்டமான பிரச்சினைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்ற பணிப்பாணையைக் கொண்டிருந்தால் அவை திட்டவட்டமான மோதல்கள், பிரச்சினைகள் மற்றும் சமூகங்கள் என்பவற்றை புறமொதுக்கும் நிலை இது தொடர்பாக கருத்து வேறுபாடு தோன்றும் மற்றொரு துறையாகும். அந்த விதத்தில். பல்வேறு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்களின் அணுகுமுறைகளை பரிசீலனை செய்தவற்கென ஓரளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். பின்புலத்திற்கு பொருத்தமான விதத்தில் முன்னெடுப்பதற்கும், அனுசரித்துச் செல்வதற்கும் மட்டுமன்றி இலங்கையில் அத்தகைய ஒரு மாதிரி வினைத்திறன் மிக்கதாக இருக்குமா? என்பதனை நிர்ணயித்துக் கொள்வதற்கும் அது தேவைப்படுகின்றது.



கலந்தாலோசணை செயலணியில் முன்வைக்கப்பட்ட ஒரு சில பரிந்துரைகள், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மாதிரியின் பொருத்தப்பாடு குறித்து பேசியிருந்தன. தென்னாபிரிக்க மாதிரி இலங்கையின் பின்புலத்திற்கு எவ்வாறு பொருத்தமானதாக இருக்க முடியும் என ஒரு சமர்ப்பணம் கேள்வி எழுப்பியிருந்தது. அதே வேளையில், உலகெங்கிலும் செயற்பட்டு வந்திருக்கும் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுக்கள் மற்றும் அதனையொத்த தேசிய பொறிமுறைகள் என்பன குறித்த ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என ஏனைய சமர்ப்பணங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. சர்வதேச உதாரணங்கள் குறித்த ஒப்பீட்டு ரீதியான ஒரு சட்ட ஆய்வை மேற்கொள்வது மட்டும் இங்கு ஒரு சவாலாக இருந்து வரவில்லை மாறாக, இலங்கை பின்புலத்தின் திட்டவட்டமான நிலவரங்களுடன் அவற்றை மதிப்பீடு செய்வதும் ஒரு சவாலாக இருக்கின்றது.

**ஆணைக்குழுக்களின் சுமை மிக்க வரலாற்றுப் பாரம்பரியம்**

மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கென ஒன்றன் பின் ஒன்றாக வந்த அரசாங்கங்களினால் உருவாக்கப்பட்ட பெருந்தொகையான ஆணைக்குழுக்களின் வரலாறு பல சமர்ப்பணங்களில் எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. முன்னைய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை மீளாய்வு செய்து, அவற்றின் அமுலாக்கத்தை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவத்தை ஒரு சில சமர்ப்பணங்கள் சுட்டிக்காட்டியிருந்த அதே வேளையில், ஏனைய சமர்ப்பணங்கள் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பாக கடுமையான ஆட்சேபணையை தெரிவித்திருந்தன. இந்தப் புதிய பொறிமுறை ஏனைய அரச ஆணைக்குழுக்களின் நீண்ட பட்டியலிலிருந்து வேறுபட்டதாக இருக்குமா என அவர்கள் கேள்விகளை எழுப்பியிருந்தார்கள். வட புலத்தைச் சேர்ந்த மூத்த பிரஜை ஒருவர் 1977இல் சன்சோனி ஆணைக்குழுவின் முன்னால் தான் சமர்ப்பணங்களை முன்வைத்திருந்ததாக குறிப்பிட்டு. ஒன்றன் பின் ஒன்றாக அமைக்கப்பட்ட பல ஆணைக்குழுக்கள் மற்றும் அமுல் செய்யப்படாத பரிந்துரைகள் என்பவற்றின் பின்னணியில், மற்றொரு ஆணைக்குழு ஏனைய ஆணைக்குழுக்களிலும் பார்க்க எதனை வித்தியாசமான விதத்தில் செய்யப் போகின்றது எனக் கேள்வி எழுப்பினார்.

கலந்தாலோசனை செயலணியின் பொதுக்கூட்டங்கள் நாட்டின் பல்வேறு பாகங்களில் இடம்பெற்ற பொழுது நானும் அக்கூட்டங்களில் பங்கேற்றேன். அவற்றில் சமூகமளித்திருந்தவர்கள் வெளிப்படுத்திய பெருமளவுக்கு பொதுவான ஓர் உணர்வு. அரசின் பன்முக முகவரகங்களுடன் செயற்படுதல் தொடர்பான ஒட்டுமொத்த அலுப்பு நிலை சம்பந்தப்பட்டதாகும்.

**தொடரும்....**

**மிராக் ரஹீம்**

# மஹிந்த ராஜபக்ஷவின் வரலாற்று பதிவுகள்

அண்மைக்கால இலங்கையின் வரலாற்றில் சிங்கள மக்களின் அமோக ஆதரவைக் கொண்ட பெரும் அரசியல் தலைவர் என்று கருதப்பட்டவர் மஹிந்த ராஜபக்ஷ நவயுக மன்னராகவும் கூட அவர் வர்ணிக்கப்பட்டு பாடல்களும் இசைக்கப்பட்டன. இன்று அவர் வெகுஜனக் கிளர்ச்சிக்கு முகங்கொடுக்க முடியாமல் பிரதமர் பதவியில் இருந்து இறங்கி அலரிமாளிகையில் இருந்து வெளியேறி பாதுகாப்புக்காக குடும்பத்தினருடன் திருகோணமலையில் உள்ள கடற்படைத் தளத்தில் தஞ்சம் புகுந்திருக்கிறார். நாட்டின் கொந்தளிப்பான நிலவரங்கள் தணிந்த பின்னர் அவர் விரும்புகின்ற இடத்துக்கு அனுப்பிவைக்கப்படுவார் என்று பாதுகாப்புச் செயலாளர் அறிவித்ததைக் காணக்கூடியதாக இருந்தது.



2019 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் 69 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக வந்த கோட்டபா ராஜபக்ஷவும் 2020 ஆகஸ்ட் பொதுத்தேர்தலில் 68 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றியதையடுத்து பிரதமராக பதவிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷவும் ஒரு 30 மாத காலத்திற்குள் மக்களினால் வெறுக்கப்பட்டு பதவிகளில் இருந்து இறங்குமாறு கேட்கப்படுவார்கள் என்று எவராவது கனவிலும் நினைத்துப் பார்த்திருப்பார்களா? ராஜபக்ஷ குடும்பத்தின் எந்தவொரு உறுப்பினரும் பொறுப்பான பதவிகளில் இருக்கக்கூடாது ஒட்டு மொத்தமாக அவர்கள் வீடு செல்லவேண்டும் என்று நாட்டு மக்கள் கேட்கின்ற அளவுக்கு அவர்கள் மீதான வெறுப்பு உச்சநிலையை அடைந்திருந்தது.

ராஜபக்ஷர்களுக்கு எதிராக பேசுவதற்தே மக்கள் அஞ்சிய காலம் போய் ஆர்ப்பாட்டக்காரர்கள் இன்று அவர்களின் வீடுகளையும் சொத்துக்களையும் தேடித்தேடி தீவைக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அம்பாந்தோட்டையில் ராஜபக்ஷர்களின் நெருங்கிய உறவினர் ஒருவரின் இல்லம் சாம்பலாக்கப்பட்டிருக்கிறது. தந்தையார் டி.ஏ. ராஜபக்ஷவின் பிரமாண்டமான உருவச்சிலை தகர்த்துவீழ்த்தப்பட்டிருக்கிறது.

மே 9ஆம் திகதி நண்பகல் அலரிமாளிகையில் இருந்து கிளம்பிய ராஜபக்ஷ ஆதரவாளர்கள் (அரசாங்க அனுசரணையுடன் கொழும்புக்கு வெளியில் இருந்து பஸ்களில் கூட்டிவரப்பட்ட காடையர்கள்) கொழும்பு காலிமுகத்திடலில் 'கோட்டா கோகம' அமைதிவழிப் போராட்டக்காரர்கள் மீது கட்டவிழ்த்து விட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கும் நிலையில் மஹிந்த ராஜபக்ஷவும் மூத்த புதல்வன் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும் நாட்டைவிட்டு வெளியேறக்கூடாது என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. தங்கள் தேவைக்கு நீதித்துறையை வளைத்துப்போட்டவர்களுக்கு இன்று இந்த அவலநிலை.

தென்னிலங்கை அம்பாந்தோட்டையில் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்த ராஜபக்ஷ குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து அரசியலில் ஈடுபட்டுவந்திருந்தாலும் அண்மைய பல தசாப்தங்களில் அந்த குடும்பத்தின் பிரபலமான 'அரசியல் முகமாக' விளங்கியவர் மஹிந்த ராஜபக்ஷவே.

1970 பொதுத்தேர்தலில் ஸ்ரீமாவோவின் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றி மாபெரும் வெற்றியைப் பெற்ற போது பெலியத்த தொகுதியில் இருந்து நாடாளுமன்றத்துக்கு தனது 24 வயதில் தெரிவானவர் மஹிந்த ராஜபக்ஷ 1977 ஜுலை நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஜே.ஆர்.ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியிடம் படுதோல்வியடைந்த போது மஹிந்தவும் பெலியத்தவில் தோல்வியைத் தழுவினார். தொடர்ந்தும் அரசியலில் துடிப்பாக இயங்கிய அவர் பிறகு 1989 பெப்ரவரியில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சியில் முதற்தடவையாக விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அம்பாந்தோட்டையில் இருந்து நாடாளுமன்றத்துக்கு தெரிவானார். அவரின் மூத்த சகோதரர் சமல் ராஜபக்ஷவும் முதற்தடவையாக அப்போது நாடாளுமன்றம் வந்தார்.

பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில் ஜனதா விமுக்திபெரமுன(ஜே.வி.பி.)வின் இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சி கொடூரமான முறையில் படைபலம் கொண்டு அடக்கப்பட்டபோது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்களுக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்த மஹிந்த ராஜபக்ஷ ஜெனீவாவுக்கும் சென்று முறையிடவும் செய்தார். பின்னர் அவரின் ஆட்சிக்காலத்தில் உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டங்களில் இடம்பெற்ற மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான உரிமைகள் மீறல்கள் முறைப்பாடுகள் தொடர்பிலான ஜெனீவா தீர்மானங்களை எவ்வாறு கையாண்டு வந்தார் என்பது அண்மைக்கால வரலாறு.

1994 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் சுதந்திர கட்சி தலைமையிலான பொதுஜன முன்னணியின் வேட்பாளரான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெற்றி பெற்று ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு அவரது அரசாங்கத்தில் அமைச்சராக மஹிந்த பதவி வகித்தார். அவருக்கு மிகவும் முக்கியமான அமைச்சுப் பொறுப்புக்களை வழங்காதிருப்பதில் திருமதி குமாரதுங்க மிகவும் எச்சரிக்கையாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமதி குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக்காலத்தின் பிற்பகுதியில் மஹிந்த பிரதமராகவும் சில வருடங்கள் பதவிவகித்தார். 2001 டிசம்பர் பொதுத்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெற்று அரசாங்கத்தை அமைத்த போது மஹிந்த நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்தார். 2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலை அவர் பிரதமர் பதவியை வகித்து வந்த நிலையிலேயே எதிர்கொண்டார். சுதந்திர கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராக போட்டியிட்ட அவர் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடித்தார்.

அந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவோ அல்லது விக்கிரமசிங்கவோ நாட்டு மக்களின் குறிப்பாக தென்னிலங்கை மக்களின் அமோக ஆதரவைக்கொண்ட வேட்பாளர்களாக இருக்கவில்லை. விக்கிரமசிங்கவின் அரசாங்கம் விடுதலை புலிகளுடன் நோர்வே நாட்டின் அனுசரணையுடன் முன்னெடுத்த சமாதான முயற்சிகளுக்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் இனவாத அடிப்படையிலான பிரசாரங்களை முன்னெடுத்த காரணத்தால் மஹிந்த ராஜபக்ஷ விக்கிரமசிங்கவையும் விட சற்று கூடுதலான செல்வாக்கைக் கொண்டவராக விளங்கியிருக்கக்கூடும்.

வடக்கு தமிழ் மக்கள் அந்த ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரமாக வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றிருக்கவே முடியாது. அவர் 28 ஆயிரம் வாக்குகளை குறைவாக பெற்றிருந்தால் ஜனாதிபதியாக தெரிவாவதற்கு தேவையான 50 சதவீதத்திற்கும் கூடுதலான வாக்குகள் என்ற எல்லையை கடந்திருக்கமாட்டார் என்பதே உண்மை. மஹிந்தவின் முதலாவது பதவிக்காலத்தில் 2009 ஆண்டில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. போர்வெற்றியை உச்ச அளவுக்கு தங்களுக்கு அனுகூலமாகப் பயன்படுத்தியே ராஜபக்ஷர்கள் தங்களது அடுத்த கட்ட அரசியலை முன்னெடுத்தார்கள். போரின் முடிவுக்குப் பிறகு சிறுபான்மை இனங்களை அரவணைக்கின்ற கொள்கைகளையும் நடைமுறைகளையும் கடைப்பிடித்து, உள்நாட்டுப் போருக்கான காரணிகளை சிங்கள மக்களுக்கு புரியவைத்து அவர்களின் நம்பிக்கையை வென்றெடுத்து தேசிய இனப்பிரச்சினைக்கு நிலையான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கும் அதன் மூலமாக நாட்டின் வளமான எதிர்காலத்தை மனதிற்கொண்ட சிறந்த அரசியல் தலைவர் என்ற பெருமையை தனதாக்கிக்கொள்வதற்கும் வரலாறு மஹிந்தவுக்கு அருமையான வாய்ப்பொன்றை வழங்கியிருந்தது. ஆனால்,அவர் அதை வேண்டுமென்றே தவறவிட்டார்.

போர்வெற்றி எக்காளத்தில் சிங்கள மக்களை மிதக்கவிட்டு, இராணுவவாதத்துடன் கூடிய சிங்கள பௌத்த பெரும்பான்மையின வாதக் கொள்கைகளை வீறுடன் முன்னெடுப்பதிலேயே ராஜபக்ஷர்கள் தீவிர கவனம்செலுத்தினார்கள். ஆட்சிமுறையினதும் கட்சி அமைப்புக்களினதும் சகல பிரிவுகளுக்கும் தங்கள் கொடுக்குகளைப் பரவி வைத்தார்கள். அதன் விளைவுகளை இன்று முழு நாடும் அனுபவித்துக்கொண்டிருக்கிறது. இலங்கை அதன் சுதந்திரத்துக்குப் பின்னரான வரலாற்றில் முன்னென்றும் இல்லாத வகையில் படுமோசமான பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கியிருக்கிறது. அத்தியாவசிய பாவனைப் பொருட்களுக்கும் மருந்துவகைகளுக்கும் எரிபொருட்களுக்கும் கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது. வாழ்க்கைச் செலவு கூரையைப் பிரித்துக்கொண்டு வானளாவ அன்றாடம் உயர்ந்துகொண்டே செல்கிறது. ஒரு நாளைக்கு ஒரு விலை கொடுத்தே மக்கள் பொருட்களை வாங்கவேண்டியிருக்கிறது. பணவீக்கம் கடுமையாக அதிகரித்துக்கொண்டே செல்கிறது. வெளிநாட்டுக்கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலை அடைந்திருக்கிறது. வெளிநாட்டு உதவித் தயவிலேயே இலங்கையின் அன்றாட வாழ்க்கையை இலங்கை ஓட்டவேண்டிய பரிதாபமான நிலை.

இத்தகைய இடர்நிலைக்கு ராஜபக்ஷர்களின் குடும்ப ஆட்சியின் ஊழல் மோசடிகளும் அதிகார துஷ்பிரயோகமும் தவறான பொருளாதார முகாமைத்துவமுமே அடிப்படைக் காரணம் என்பதை விளங்கிக்கொண்ட மக்கள் கடந்த பல வாரங்களாக வீதிப் போராட்டங்களில் இறங்கியிருக்கின்றார்கள். ராஜபக்ஷர்கள் அரசியலுக்கு இனிமேல் வரக்கூடாது என்று கோஷங்களை எழுப்புகிறார்கள். நாட்டைச் சூறையாடிய அவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்யவேண்டும் என்ற முழக்கங்கள் போராட்டங்களில் ஒலிக்கின்றன.

சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனைகளில் சாதாரண மக்களை மூழ்கவைத்து விட்டு ராஜபக்ஷர்கள் தங்களை வளப்படுத்திக்கொண்டார்கள். அவர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சொத்துக்களை வாங்கிக்குவித்துவைத்திருக்கிறார்கள் என்று பரவலான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

இலங்கை அரசியல் ராஜபக்ஷர்களின் காலத்தில்தான் குடும்ப ஆட்சியுடன் அடையாளப்படுத்தப்படுகிறது என்றில்லை. முன்னரும் கூட அரசியல் முக்கியமான நிலப்பிரபுத்துவ-முதலாளித்துவகுடும்பங்களின் செல்வாக்கின் கீழ் இருந்து வந்திருக்கிறது. சேனநாயக்க, பண்டாரநாயக்க குடும்பங்களை உதாரணமாகக் கூறலாம். ஐக்கிய தேசிய கட்சி ஒரு காலத்தில் மாமன் - மருமகன் கட்சி என்றே அழைக்கப்பட்டது. சுதந்திர கட்சிக்குள் கடந்த நூற்றாண்டின் பிற்பகுதி வரை பண்டாரநாயக்க குடும்பத்தவரைத் தவிர்ந்த வேறு எவரும் தலைமைத்துவத்துக்கு வருவது குறித்து நினைத்துப்பார்க்கவே முடியாது. ஆனால், அந்தக் குடும்பங்கள் ராஜபக்ஷர்கள் அளவுக்கு மக்களால் வெறுக்கப்படவில்லை. இவர்கள் அளவுக்கு ஊழல் மோசடிகள், அதிகார துஷ்பிரயோகம், பொதுச்சொத்துக்கள் சூறையாடல் ஆகியவற்றுடன் அந்தக் குடும்பங்கள் அடையாளப்படுத்தப்படவில்லை. அத்துடன், ராஜபக்ஷ குடும்பத்தின் உறுப்பினர்களும் உறவினர்களும் அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்களும் பெரும் எண்ணிக்கையில் ஆட்சி நிர்வாகத்தில் ஆக்கிரமிப்பு செய்தது போன்று அந்த குடும்பங்கள் நடந்து கொள்ளவில்லை.

இலங்கையின் சிறந்த அரசியல் ஆய்வாளர்களில் ஒருவரான பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்றில் இன்றைய மக்கள் போராட்டங்கள் குறித்து எழுதிய கட்டுரையொன்றில் ராஜபக்ஷர்கள் பற்றி செய்த விமர்சனத்தின் ஒரு பந்தியை இங்கு நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும்.

**"ராஜபக்ஷர்கள் இலங்கையின் காயப்பட்ட ஜனநாயகம், குடும்ப ஆதிக்கத்துடன் கூடிய எதேச்சாதிகாரம், சிறிய குழுவினரின் ஆட்சி மற்றும் அரசியல் ஊழல் ஆகியவற்றின் படுமோசமான மரபுகளில் ஒன்றின் சின்னமாக விளங்குகிறார்கள். இலங்கை ஜனநாயகம், கட்சி அரசியல், நாடாளுமன்ற செயன்முறைகள் மற்றும் சமூக அமைதி ஆகியவை மீதான ராஜபக்ஷர்களின் பாதகமான செல்வாக்கு படுமோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது"**

என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

**11ஆம் பக்கம் பார்க்க...**

**வீரகத்தி தனபாலசிங்கம்**



# களைகட்டும் உள்ளூராட்சி தேர்தலும், கவிழப்போகும் ஆட்சியாளர்களும்

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் குறிப்பிட்டுள்ளதாவது. இலங்கையினுடைய உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்காக தேர்தல் ஆணைக்குழு நியமன பத்திரங்களை கோரியிருக்கின்றது. இலங்கை முழுவதும் இருக்கக்கூடிய 341 சபைகளில் 340 சபைகளுக்கான நியமன பத்திரங்கள் கோரப்பட்டிருக்கின்றன. ஹெல்பிட்டிய பிரதேச சபையிலே நீதிமன்ற வழக்கு காரணமாக அதற்கு கோரப்படவில்லை. எது எவ்வாறு இருந்தாலும் ஆணைக்குழு என்ற தன்னுடைய அதிகாரத்தை பாவித்து அவர்கள் நியமன பத்திரத்தை 18 ஆம் திகதியில் இருந்து 21 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை தாக்கல் செய்யப்பட முடியும் என அறிவித்திருக்கின்ற நிலையிலே கட்டுப்பணத்தை கட்டுபவர்கள் 20 ஆம் திகதிக்கு முன்னர் கட்ட வேண்டும் என்ற வேளையிலே இலங்கை அரசாங்கத்தின் ஜனாதிபதியை பொறுத்தவரையிலே ஜனாதிபதி தேர்தலுக்கு முன் அவர்கள் எந்த தேர்தலையும் நடத்த விரும்பவில்லை. இந்த சூழ்நிலையின் பின்னணியில் தான் நியமன பத்திரங்கள் நீதிமன்ற தடை உத்தரவு ஏதாவது பெறப்படுமாக அல்லது பாராளுமன்றத்திலே ஏதாவது திருத்தத்தை பிரயோகித்து இத் தேர்தலை ஒத்திவைக்கப்படுமா? என்பதும் தெரிவில்லை. தேவைப்பாடு இருந்தாலும் நியமன பத்திரங்கள் கோரி முடிக்கப்பட்டாலும் கூட இந்த தேர்தல் ஒத்திவைக்கப்படும் நிலைமை தான் அதிகமாக காணப்படுகின்றது. அவ்வாறு ஒத்திவைக்கப்பட்டால் மீண்டும் நியமன பத்திரங்களை ரத்து செய்து தேர்தலை நடத்தக்கூடிய வாய்ப்புக்கள் இல்லை. ஆறு மாதங்களுக்கு பின்னரோ அல்லது ஓராண்டிற்கு பின்னரோ இந்த தாக்கல் செய்யப்பட்ட நியமன பத்திரங்களின் அடிப்படையில் தான் தேர்தல்கள் நடைபெறும். இதுதான் இலங்கையின் கடந்த கால வரலாற்றைப் பார்த்தால் அவ்வாறு தான் இருக்கின்றது. எனவே இந்த வகையில் தான் இவற்றை நோக்க முடியும்.

குறிப்பாக நாட்டின் பொருளாதார பிரச்சனை ஒருபக்கம் இருந்துகொண்டிருக்க இதற்கான செலவீனம் 1100 கோடியாகும் என அறிவித்திருக்கின்ற கட்டத்திலே அதனை எவ்வாறு இலங்கை அரசாங்கம் ஈடு செய்யும் என்றகேள்விஇருக்கதான்செய்கின்றது. இதைப் போன்று தான் 2003 ஆம் ஆண்டிலும்கூட தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதான ஒப்பந்தத்தை செய்துவிட்டு உள்ளூ ராட்சிமன்ற தேர்தல்களை அறிவித்துவிட்டு பாராளுமன்ற உறுப்பினராக நான் இருந்த பொழுது எங்களுடன் பேசிய அன்றைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்கள் நாங்கள் கோருகின்றோம். ஆனால் அதன் பின்னர் இந்த தேர்தல்கள் ஒத்திவைக்கப்படும் என்று கூறிய விடயங்களை எல்லாம் நாங்கள் அறிந்திருக்கின்றோம். ஆகவே இவற்றையெல்லாம் பார்க்கின்ற பொழுது பொருளாதாரம் என்பது 1000 கோடி என்பதோ அல்லது1200கோடிஎன்பதோபிரச்சனையல்ல. அனைத்திற்கும் கடன் வாங்குபவர்கள் இதற்கும் கடன் வாங்கி சமாளிப்பார்கள். இந்தியாவிடம் மையை கேட்பார்கள் அல்லது கடதாசியை கேட்பார்கள். இன்னுமொருவரிடம் ஏதேனும் ஒன்றை கேட்பார்கள் ஆனால் அவை பிரச்சனை இல்லை இவற்றை மக்களும் இன்று எதிர்கொள்ளக்கூடிய மனோநிலையில் இல்லை. ஆனால் இலங்கை அரசாங்கம் ஒரு பித்தலாட்டத்தைத் தான் ஆடிக்கொண்டிருக்கின்றது. எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற ஒரு சூழ்நிலை தான் இலங்கையில் இருந்துகொண்டு இருக்கின்றது. இதில் கட்சி ஒற்றுமை கட்சிகள் ஒன்றாக இணைக்கப்பட்டு செயற்பட வேண்டும் என கூட்டமைப்பு தரப்பு ஒருபக்கம் கூறிக்கொண்டிருக்கின்றார். இதற்கிடையில் கட்சிகள் வேட்பாளர்களை நியமிக்க வேண்டும் என்றநோக்கில்அவர் துரிதமாக செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது. இது தொடர்பில் உங்களது கருத்து என்ன என்ற கேள்விக்கு பதலளித்த சிவாஜிலிங்கம் ஒரு தேர்தல் சட்டத்திற்கு கீழே திகதி அறிவிக்கப்பட்டால் 14 ஆம் நாளில் இருந்து நியமன பத்திரங்கள் ஆரம்பிக்கப்படும். ஆரம்பிக்கப்பட்டு 3 அரை நாளிலே அதாவது 17 ஆம் நாள் அரை நாளிலே இவை முடிவடைய வேண்டும் என்பது தான் சட்டம். எனவே கூட்டுக்கள் தென்னிலங்கையிலே ஒரு மாதிரியாக வரப்போகின்றது என்று இருந்த பொழுதும் தமிழ் பகுதியை பொருத்தவரையிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பலப்படுத்தப்பட்டு 6 கட்சிகள் கொண்ட பரந்துபட்ட கூட்டணியாக வரவேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் அது இலங்கை தமிழரசுக் கட்சி ஜனவரி மாதம் 7 ஆம் திகதி நடைபெறும் கூட்டத்தில் அவர்களின் முடிவு தெரிய வந்ததன் பின்னர் தான் 6 கட்சி கூட்டு வரப்போகின்றதா? இல்லையா? என்பது தெரிய வரும். தேர்தலை பொறுத்தவரையில் அதன் பின்னர் தான் அதிலிருந்தரெலோவும்புளொட்டும்வெளியேறப் போகின்றதா? அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து கூட்டமைக்கப்போகின்றார்களா? இல்லை அவர்கள் மூன்று பேரும் சேர்ந்து நிற்கப்போகின்றார்கள் என்றால் ஏனைய தமிழ் மக்கள் தேசிய கூட்டணி விக்னேஸ்வரன் ஐயா தலையிலான 4 கட்சி கூட்டணி அதில் நிற்குமா? என்பதனை இன்னும் பலப்படுத்தி தேர்தலை சந்திப்பது பற்றி நாங்கள் யோசித்துக்கொண்டிக்கின்றோம். எனவே இந்த வாரம் ஒரு தீர்க்கமான வாரமாக அமையும் என்பது தான் எனது கருத்து.

அதே நேரம் த.தே.கூட்டமைப்பின் பங்காளி கட்சியான தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ரெலொ அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கூட்டமைப்பின் ஒற்றுமை பற்றி கருத்து தெரிவிக்கையில் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாக போட்டியிட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. **தேர்தலில் கதிரைகளுக்காக தனித்தனியாக போட்டியிடுவது என்பது எமது இலட்சியம் இல்லை.** தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனித்தனியாக போட்டியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக போட்டியிட வேண்டும் என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். மன்னாரில் வைத்து புதன்கிழமை(4) மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், எந்த தேர்தலையும் நாங்கள் சந்திக்க தயாராக இருக்கிறோம். அந்த வகையில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள தேர்தலையும் நாங்கள் சந்திக்க வேண்டும். எனினும் தேர்தல் முறையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த முறையானது மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆளுகின்ற நிலை இல்லாத முறையாக இருக்கிறது. மக்களினுடைய எண்ணங்கள் புறக்கணிக்கப்படுகின்றது. அந்த வகையில் தேர்தல் முறை மாற்றப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாக உள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தேர்தலை சந்திக்க வேண்டி உள்ளது. ஒற்றுமையாக சந்திக்க வேண்டும் என்பது எமது நோக்கம். இந்த கால கட்டத்தில் இந்த தேர்தல் வருகிறது என்பதை பார்க்கின்ற போது அரசாங்கம் நடக்க இருக்கின்ற தேர்தலுக்கான நிதி யை உலக நாடுகளிடம் இருந்து பெற்று மக்களின் ஜனநாயக கோரிக்கைகளை மக்கள் செலுத்துகின்ற வாக்கின் ஊடாகவே அறிந்து கொள்ள முடியும். எனவே தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதே எனது கருத்து. இந்த தேர்தல் முறைமை மாற்றப்பட வேண்டும் என்பதும் எமது பிரதான கருத்து.



இத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாக போட்டியிட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.தேர்தலில் கதிரைகளுக்காக தனித்தனியாக போட்டியிடுவது என்பது எமது இலட்சியம் இல்லை.தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனித்தனியாக போட்டியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக போட்டியிட வேண்டும். தேர்தலுக்கான அமைப்பாக தமிழ் தேசியக்கூட்டமைப்பு இல்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன். ஒற்றுமையாக எமது இனப்பிரச்சினை, மக்களின் பிரச்சினைகள் போன்றவற்றை நாங்கள் தட்டிக்கேட்கும்.அதனை செயல் படுத்துகின்ற விடயங்களை கையாளுகின்ற ஒரு அமைப்பாக தொடர்ந்து தமிழ் தேசியக்கூட்டமைப்பு செயல்பட வேண்டும். நாங்கள் முன் வைத்த கோரிக்கை மட்டக்களப்பில் இடம் பெற இருக்கும் தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என எதிர்பார்க்கின்றேன். ஒற்றுமையை வலியுறுத்துகின்ற வகையில் எதிர்பார்க்கின்றோம். எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு பின் நாங்கள் என்ன செய்வது என்ற நிலைப்பாட்டை தெரிவித்துக் கொள்ள முடியும். என அவர் மேலும் தெரிவித்தார்.

இன்றைய சமகால அரசியல் பார்வையிலே தமிழ் தேசிய கூட்டமைப்பு எங்கே செல்கின்றது என்ன செய்து கொண்டிருக்கின்றது அதனை இல்லாமலாக்குவதற்கான அரசாங்கத்தின் திட்டம் ஒருசில தமிழ் அரசியல் தலைவர்களை வைத்து காய் நகர்த்தப்படுகின்றது. இதனை அறிந்து தமிழரசுக்கட்சி செயற்படுகின்றதா அல்லது அதனோடு ஒட்டிக்கொண்டிருக்கின்ற ஏனைய ஆயுத குழுக்கள் செயற்படுகின்றனவா என்றும் கூட உலறாத வகையிலே இந்த தமிழ் அரசியல் கட்சியினுடைய ஒரு போர்வைத்தனமான கருத்துக்கள் தாக்கத்தை இந்த கட்டத்தில் ஏற்படுத்தியிருக்கின்றது. ஆகவே தமிழ் தேசிய கூட்டமைப்பை ஒருதலைக்க வேண்டும் அல்லது அதனை ஒன்று திரட்டி எடுக்கும் பொழுது வலுவான பலமான கட்சியாக அமையும் என்பதிலே தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் மிகவும் காத்திரமாக ஊடகவியலாளர் சிவராம் அவர்களை வைத்து முதலாவது பேச்சுக்களை நடத்தி தமிழ் தேசிய கூட்டமைப்பை ஒருங்கிணைப்பதற்கான ஏதுவான அனைத்து வழிகளையும் ஏற்படுத்தி தமிழ் தேசிய கூட்டமைப்பு கடந்த காலங்களிலே 22 ஆசனங்களைப் பெற்றுக்கொள்கின்ற அளவிற்கு நிலைமை மாற்றப்பட்டிருந்தது. ஆகவே இவ்வாறான சூழ்நிலை இருக்கின்ற பொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பை பிளவுபடுத்த வேண்டும் அல்லது அதனை இல்லாது செய்ய வேண்டும் என்ற முனைப்போடு அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டிருக்கின்ற கருணா பிள்ளையான் மற்றும் டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களும் அந்த கட்சியிலுள்ளவர்களையும் பிளவுபடுத்தி எடுக்கும் ஒரு நிலைமையும் அந்த உள்ளூ ராட்சி மன்றத்தில் உள்ள உறுப்பினர்களையும் நாங்கள் விலை கொடுத்து வாங்கும் செயற்பாடுகளையும் அவர்களும் செய்து கொண்டிருந்தார்கள். எனவே இன்றைய சூழ்நிலையை பார்க்கும் பொழுது ஒன்றில் அரச தரப்புடன் ஆளுங்கட்சி அல்லது எதிர்க்கட்சி ஆகிய இரண்டு கட்சிகளுடனும் இணைந்து பயணிக்கின்ற ஒரு பயன்பாடாகவே இந்த நிலைமை மாறப்போகின்றது என்பது பலருடைய விமர்சனங்களாக இருக்கின்றது. ஒரு விடயத்தை விளங்கிக்கொள்ள வேண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பு என்பது ஒரு தனியான கட்சியுமல்ல அல்லது அதுவொரு வலுவற்ற கட்சியும் இல்லை அதனை பதிவு செய்வதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றை நிவர்த்தி செய்தால் உண்மையிலே அடுத்தடுத்த கட்டங்களை நகர்த்திக்கொண்டு செல்லக்கூடிய நிலைமை உருவாக்கப்படும். ஆனால் இவர்கள் அத்தகைய நிலைப்பாட்டை கைவிட்டுவிட்டு சுதந்திரத்தைப்போன்ற அரசாங்கத்தின் ஒருசில அடிவருடிகளுடைய கதைகளை கேட்டு அல்லது அவர்களுடைய அறிக்கை அல்லது பத்திரிகை ஊடகங்களிலே தாங்கள் ஒரு விளம்பரராக வரவேண்டும் என்று ஒவ்வொரு கருத்துக்களையும் கூறுகின்ற பொழுது உண்மையிலே அந்த தமிழ் தேசிய கூட்டமைப்பினுடைய கூட்டை கொஞ்சம் கொஞ்சமாக உடைத்து அந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்த அரசியல் பரம்பில் இல்லாமல் போகும் அளவிற்கு நிலைமை கொண்டுவருவதற்கான செயல்திட்டங்களைத்தான் இந்த அராங்கத்தில் நுழைந்து பலரும் மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்து கட்சிகளை சின்னாபின்னமாக்குகின்ற ஒரு நிலைமையை தற்பொழுது உருவாக்கியிருக்கின்றார்கள்.

11ஆம் பக்கம் பார்க்க...

வல்லவன்

# பிராந்திய செய்திகள்

## "வெல்லம்பிட்டிய குடு ஸ்வர்ணா" என்னும் போதைப்பொருள் வியாபாரியான பெண் கைது

சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 63 வயதுடைய குறித்த பெண் "வெல்லம்பிட்டிய குடு ஸ்வர்ணா" எனப்படும் போதைப்பொருள் வியாபாரி என கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபரிடம் இருந்து 25 கிராம் 940 மில்லிகிராம் போதைப்பொருளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் மேல் மாகாண ஊழல் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது வெல்லம்பிட்டிய லான்சியா வத்த பகுதியில் உள்ள சந்தேக நபரின் வீட்டில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபருக்கு எதிராக 4 போதைப்பொருள் வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

## 2022ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களுக்கான அறிவிப்பு!

2022 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை தொடர்பான உதவி வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடத்துவதற்கு எதிர்வரும் 17 ஆம் திகதி நள்ளிரவு முதல் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சை ஜனவரி 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். பரீட்சை ஆரம்பிக்கப்படுவதற்கு 5 நாட்களுக்கு முன்னர் பரீட்சை தொடர்பான உதவி வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடத்துவதை தடை செய்யுமாறு கல்வி அமைச்சர் உத்தரவிட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

## மீன்பிடிக்கப்பலில் இருந்து ஹெரோயின் மீட்பு!



பல நாள் மீன்பிடிக் கப்பலில் இருந்து 23 கிலோ 235 கிராம் ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடற்படை புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்திற்கு அருகில் உள்ள கடலில் வைத்து குறித்த கப்பலை சோதனையிட்டதில் ஹெரோயின் கையிருப்பு கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அங்கு சந்தேகத்தின் பேரில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 33 மற்றும் 42 வயதுடைய மிரிஸ்ஸ, கம்புருகமுவ மற்றும் பிடிகல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

## சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டம் அறிமுகப்படுத்த நடவடிக்கை!

நாட்டின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இந்தியாவின் பதிலை இம்மாத இறுதியில் பெற்றுக்கொள்ள அரசாங்கம் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீனாவுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடக செய்திப் பணிப்பாளர்களுடன் அன்று (06) ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யூடியூப், பேஸ்புக் உள்ளிட்ட சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்காக சிங்கப்பூரில் தற்போது பயன்படுத்தப்படும் தொலைத்தொடர்பு மற்றும் சமூக ஊடகச் சட்டத்தைப் போன்ற சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## பாடசாலைகளில் 22,000 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள்!

பாடசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களை இணைத்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இந்த மாத இறுதியில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த அறிவிப்பை கல்வி அமைச்சு விடுத்துள்ளது. தற்போது பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள பட்டதாரிகள் உட்பட அரச சேவையில் உள்ள 40 வயதிற்குட்பட்ட பட்டதாரிகள் இதற்காக விண்ணப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



12,000 ஆசிரியர்கள் கடந்த டிசம்பர் 31 ஆம் திகதி ஓய்வு பெற்றமையை அடுத்து, தற்போது 22,000 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம் மற்றும் அழகியல் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, போட்டிப் பரீட்சையை விரைவாக நடத்தி ஏப்ரல் மாதத்திற்கு முன்னதாக புதிய ஆசிரியர்களை சேவையில் இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## ஆண் ஒருவரின் சடலம் மீட்பு-பொலிஸார் விசாரணை முன்னெடுப்பு!

ஆற்றில் இருந்து மீட்கப்பட்ட ஆணின் சடலம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செந்நெல் கிராமம் 02ஆம் பிரிவில் நெல்லுச்சேனை உடங்காறு அணைக்கட்டு நீர்த்தேக்கப் பிரதேசத்தில் வியாழக்கிழமை (5) மாலை ஆணின் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டிருந்தது.

பொதுமக்களின் தகவல்களுக்கமைய பொலிஸாரினாரல் சடலமாக மீட்கப்பட்டவர் சம்மாந்துறை செந்நெல் கிராமம் 02ஆம் பிரிவு நெல்லுச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த அப்துல் றஹீம் முஹமட் சஸ்னி (வயது 21) என்பவராவார். குறித்த மரணம் தொடர்பில் பெற்றோரால் சம்மாந்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் மரணித்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அம்பாரை மாவட்ட தடயவியல் பொலிஸார் நேரில் வந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.




## பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள்

மேல் மாகாணத்தில் 149 பாடசாலைகளை உள்ளடக்கிய போதைப்பொருள் நடவடிக்கைகளில் ஈடுபட்ட 55 சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அன்று (05) பிற்பகல் 1 மணி முதல் 3 மணி வரை மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையின் போது போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரைகளை விற்பனை செய்த குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 9 கிராம் 980 மில்லி கிராம் ஐஸ், 16 கிராம் 420 மில்லி கிராம் ஹெரோயின், 2 கிராம் 833 மில்லி கிராம் கஞ்சா, 20 போதை மாத்திரைகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளை உள்ளடக்கி இந்த போதைப்பொருள் சோதனைகள் தொடரும் என மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.




## லாஃப்ஸ் எரிவாயு விலை குறைப்பு

லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம் உள்நாட்டு எரிவாயு விலையை குறைக்க முடிவு செய்துள்ளது. இதன்படி, கொழும்பு மாவட்டத்தில் 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 5,080 என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கொழும்பு மாவட்டத்தில் 5 கிலோ கிராம் லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 2,032 ரூபாவாகும்.ஏனைய மாவட்டங்களுக்கு ஏற்ப வெவ்வேறு விலைகளை அறிந்து கொள்ள வாடிக்கையாளர் சேவை எண்ணான 1345 ஐ தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சினி துளிகள்



## சமந்தாவின் முழு சொத்து மதிப்பு குறித்து வெளியான தகவல்!



தமிழ் சினிமாவில் முன்னணி கதாநாயகியாக இருப்பவர் சமந்தா.

இவர் நடிப்பில் கடைசியாக வெளிவந்த யசோதா திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்றது.

இதை தொடர்ந்து அடுத்ததாக சகுந்தலம் திரைப்படம் வருகிற பெப்ரவரி மாதம் வெளியாகிறது.

சிகிச்சையில் இருக்கும் சமந்தா கொஞ்சம் கொஞ்சமாக மீண்டு வருகிறார் என்றும் கூறப்படுகிறது.

இந்நிலையில், நடிகை சமந்தாவின் முழு சொத்து மதிப்பு குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி நடிகை சமந்தாவின் இன்றைய சொத்து மதிப்பு மட்டுமே சுமார் ரூ. 80 கோடி முதல் ரூ. 101 கோடி இருக்கும் என தெரிவிக்கின்றனர்.

## சிறு பட்ஜெட்டில் உருவான திரைப்படம்!

கபாலி, பரியேறும் பெருமாள், வி1 போன்ற பல படங்களில் குணச்சித்திர வேடங்களில் நடித்த லிங்கேஷ் கதாநாயகனாக நடித்து வெளியான படம் "காலேஜ் ரோடு". இயக்குனர் ஜெய் அமர்சிங் இயக்கியிருந்த இந்த படத்தில் மோனிகா, ஆனந்த்நாகு, அன்சர், அக்சய்கமல், பொம்முலக்ஷ்மி, நாடோடிகள் பரணி, மெட்ராஸ் வினோத், அருவிபாலா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர்.

காலேஜ் ரோடு எம்பி என்டர்டெயின்மெண்ட் தயாரித்த இந்த படத்திற்கு ஆப்ரோ இசையமைத்திருந்தார். இளைஞர்களின் வாழ்வில் கல்வியின் அவசியமும் அந்த கல்வி இன்று என்னவாக இருக்கிறது. அது அனைவருக்குமானதாக இருக்கிறதா? என்ற கல்வி நிலையங்களில் இருக்கும் மிக முக்கிய பிரச்சினைகளை மையமாக வைத்து "காலேஜ் ரோடு" வெளியானது.

திரையரங்குகளில் வெளியான இப்படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. சிறிய பட்ஜெட்டில் வெளியான இப்படத்தின் வெற்றியால் சிறு பட தயாரிப்பாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




## வாரிசு–துணிவு முறியடிக்க முடியாத சாதனை

அஜித்தின் துணிவு மற்றும் விஜய்யின் வாரிசு இரு திரைப்படங்களும் வருகிற 11ம் திகதி வெளியாகிறது.
வாரிசு படத்தின் ட்ரைலர் வெளிவந்த பல சாதனைகளை படைத்தது.
ஆனால், 24 மணி நேரத்தில் துணிவு ட்ரைலர் செய்த சாதனையை வாரிசு படத்தால் முறியடிக்க முடியவில்லை.

துணிவு ட்ரைலர் 24 மணி நேரத்தில் 30 மில்லியன் பார்வையாளர்களை கடந்திருந்தது.

ஆனால், வாரிசு திரைப்படமோ 24 மணி நேரத்தில் 23 மில்லியன் பார்வையாளர்களை மட்டுமே கடந்து துணிவு ட்ரைலரிடம் தோற்றுப்போயுள்ளது.

ஆனால், லைக்சில் துணிவு ட்ரைலரை விட வாரிசு ட்ரைலர் அதிகமாக பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.




## மறுமணம் குறித்து மனம் திறந்த பிரகதி


பாக்யராஜ் நடித்து இயக்கி 1994-ல் வெளியான "வீட்ல விசேஷங்க" படத்தில் கதாநாயகியாக அறிமுகமானவர் பிரகதி. தொடர்ந்து பெரிய மருது உள்ளிட்ட பல படங்களில் நாயகியாக வந்தார். ஜெயம், சிலம்பாட்டம், எத்தன், தோனி, கெத்து, தாரை தப்பட்டை போன்ற படங்களில் அம்மா, அண்ணி, அக்கா என்று குணசித்திர வேடங்களில் நடித்தார்.

தெலுங்கிலும் அதிக படங்களில் நடித்து இருக்கிறார். பிரகதி தனது 20-வது வயதில் சாப்ட்வேர் என்ஜினியர் ஒருவரை திருமணம் செய்து சில வருடங்களிலேயே அவரை விவாகரத்து செய்து பிரிந்தார். இந்த நிலையில் பிரகதி தற்போது மறுமணம் செய்து கொள்ள தயாராகி இருப்பதாக தெலுங்கு இணையதளங்களில் தகவல் பரவியது.

இதற்கு பிரகதி விளக்கம் அளித்துள்ளார். அவர் கூறும்போது, "எனக்கு இப்போது 47 வயது ஆகிறது. இந்த வயதில் மறுமணம் செய்து கொள்வது பற்றி யோசித்து பார்க்கவே முடியவில்லை. பல வருடங்கள் தனியாகவே இருந்து விட்டேன். வாழ்க்கையில் பல பிரச்சினைகளை தனியாகவே சந்தித்து மீண்டு இருக்கிறேன். இனிமேல் திருமணம் செய்து கொள்வது சரிவராது. வாழ்க்கையில் துணை இனிமேல் தேவை இல்லை" என்றார்.



# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?




**சுழியோடி**

**02**

தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாற்றிலே மாற்றத்தை ஏற்படுத்திய 2002ஆம் ஆண்டின் பின்னரான காலப்பகுதி அமைந்துள்ளது. அதாவது சமாதான காலப்பகுதி என்று குறிப்பிடலாம். இந்த சமாதான காலப்பகுதியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நிர்வாக பகுதியான வன்னி பகுதிக்கு பல்வேறுபட்ட நாட்டு பிரமுகர்களின் வருகை வேற்றின மக்களின் வருகை என்பன அதிகரித்திருந்த வேளையில் தான் விடுதலை போராட்டத்திற்கு எதிரானவர்களின் ஊடுருவல்கள் என்பனவும் அதிகரித்திருந்தன. இதனை முறியடிக்க இவ்வாறானவர்களை கண்டறிந்து இந்த ஊடுருவல்களை தடுக்கும் நடவடிக்கையில் விடுதலைப்புலிகளின் புலனாய்வு பிரிவினர் வன்னி பெருநிலப்பரப்பில் தீவிரமாக ஈடுபட்டனர்.

தமிழ் மக்கள் சிலரே இவ்வாறான துரோகத்தனங்களில் ஈடுபட்டிருந்ததால் சந்தேகத்திற்கு இடமானவர்கள் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட போது மக்களிடையே சில மனகசப்பும் ஏற்படத்தான் செய்தது. எனினும் தாயகத்தின் பாதுகாப்பு என்ற வகையில் இந்த நடவடிக்கைக்கு பெருமளவு மக்கள் ஆதரவு வழங்கினர் இதே வேளை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கான பொருளாதார தடை தளர்த்தப்பட்டது. விடுதலைப்புலிகளும் வன்னி வாழ் மக்களும் பொருளாதார ரீதியான வளர்ச்சி பெறுவதற்கு சற்று வழியையும் ஏற்படுத்திக் கொடுத்தது ஆனால் இது மறைமுகமாக தமிழீழ விடுதலை போராட்ட வளர்ச்சிக்கு மறைமுக பாதிப்பு ஒன்றை ஏற்படுத்தி கொண்டிருப்பதையும் மறுப்பதற்கு இல்லை. இவ்வாறு வன்னி மக்கள் மீதான பொருளாதார தடை சிறிலங்கா அரசால் நீக்கப்பட்டதை தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் உள்ள தங்கள் நிர்வாக பகுதிகளுக்கும் பொருளாதார தடைகளை முற்றுமுழுதாக நீக்குமாறு விடுதலைப்புலிகளால் சிறிலங்கா படையினிடம் கோரிக்கை விடப்பட்டது. இதன் பிரகாரம் எழுந்த அல்லது உருவாக்கப்பட்ட பிரச்சனை தான் மாவிலாற்று பிரச்சனை இயற்கையின் எழில் நிறைந்த மாவட்டமாக திருகோணமலை மாவட்டம் காணப்படுகின்றது. இயற்கை துறைமுகம் விமானப்படைத்தளம் எண்ணெய் சேமிப்பு கிணறுகள் என்று பல நாடுகளின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக அது காணப்படுகிறது. விஞ்ஞானி ஆதார் சீ கிளாக் அவர்கள் கூட ஆசிய கண்டத்தில் திருகோணமலையை முக்கிய இடமாக குறிப்பிட்டுள்ளார்.

அதாவது செய்மதி ஏவுதளம் அமைக்கக்கூடிய இடமாக திருகோணமலை விளங்குவதாக அவர் கணித்திருந்தார். அதேவேளை பல்வேறு நாடுகளும் திருகோணமலையை முதன்மை இடமாக கருதுகின்றன. இந்நிலையில் திருகோணமலையில் சில இடங்கள் சிறிலங்கா அரசால் வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டு இருந்தன. இவ்வாறு அமையபெற்ற இடத்திலிருந்து கொண்டே விடுதலைப்புலிகள் 2003ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் தலைதூக்கிய துரோகத்தினை களைவதற்கு படையெடுத்து அதில் வெற்றியும் பெற்றார்கள். கிழக்கில் இருந்து விடுதலை போராட்டத்தின் துரோகிகள் விரட்டியடிக்கப்பட்டு பாதுகாப்பான நிலைக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் அங்கு விடுதலைப்புலிகளின் நிர்வாக கட்டமைப்புக்கள் மீண்டும் செயற்பட தொடங்கின.

திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் தொடக்கம் வெருகல் துறைமுகத்துவாரம் வரையான 50 மீற்றர் கரையோர பகுதி விடுதலைப் புலிகளின் திறமைமிக்க நிர்வாக பகுதிகளில் ஒன்றாக விளங்கியது. பல கிராமங்களை உள்ளடக்கிய இந்த பிரதேசங்களில் வாழும் மக்கள் விவசாயத்தையும் கடல் தொழிலையும் தமது தொழிலாக கொண்டு வாழ்ந்து வந்தார்கள். கல்வியில் சற்று குறைவான நிலையியே இங்கு காணப்பட்டது. இம்மக்கள் தமது அன்றாட பொருட்களை கூட சிறிலங்கா படையினரின் பிரதேசங்களுக்குள் சென்றே பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. சம்பூர் மக்கள் கட்டைபறிச்சான் பொலிஸ் சோதனை நிலையம் ஊடாகவும் ஈசிலம்பறு வெருகல் கிராம மக்கள் சேருநுவர படை சோதனை நிலையம் ஊடாகவும் கதிரவெளி மக்கள் வாழைச்சேனை படை சோதனை நிலையம் ஊடாகவும் சென்றே பொருட்களை பெற வேண்டும். ஒருவர் தனக்கு தேவையான பொருட்களை மட்டுமே கொண்டு செல்லலாம் பெருமளவு பொருட்கள் எடுத்துச்சென்றால் அவர் படையினரால் சந்தேகிக்கப்பட்டு விசாரிக்கப்படுவார். இவ்வாறு அங்குள்ள மக்களுக்கான பொருளாதார தடை சிறிலங்கா படையினரால் போடப்பட்டிருந்தது. இவற்றின் மத்தியில் தான் விடுதலைப்புலிகள் தமது நிர்வாகத்தை அங்கு நடத்தினார்கள். காட்டு வழியாகவும் கடல் வழியாகவும் பொருட்களை கொள்வனவு செய்தே விடுதலைப்புலிகள் தமது நிர்வாகத்தை நடத்தினார்கள். அங்கு பல பயிற்சி தளங்களை நிறுவினார்கள் பல நூறு போராளிகளை உருவாக்கினார்கள். மறைமுகமாக அங்கு விடுதலைப்புலிகளின் கடற்படைத்தளங்கள் நிறுவப்பட்டன.

இதன் பிரகாரம் புலம்பெயர்வால் தமிழ் மக்களின் நிதி உதவியில் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுத தளபாடங்கள் கப்பல் வழியாக திருகோணமலையில் ஒரு தொகுதி இறக்கப்படுகிறது. இவ்வாறு அங்கு கடல்புலிகளின் நிலைப்படுத்தல் உயர்ந்து கொண்டு சென்றது. இதனாலையே விடுதலைப்புலிகளின் கடல்புலிகளின் ஆதிக்கம் மேலோங்கி காணப்படும் காலப்பகுதியாக 2003 ஆம் ஆண்டுக்கு பின்னரான காலப்பகுதி அமைந்தது. கடல்புலிகளின் பலமே விடுதலைப்புலிகளின் பலம் என்று குறிப்பிட்டு சொல்லும் அளவுக்கு பலமான அணியாக கடற்புலிகள் அணி செயல்பட்டது. இது சிறிலங்கா கடற்படைக்கு மட்டுமில்லை தரைப்படைக்கும் பாரிய அச்சுறுத்தலாக இருந்தது. தங்களுக்கான படையினரின் பலத்தை பெருக்கி கொண்டும் ஆயுத தளபாடங்களை கொள்வனவு செய்து கொண்டு இருந்த சிறிலங்கா படையினருக்கு விடுதலைப்புலிகள் தங்கள் படைபலத்தை பெருக்குகிறார்கள் என்பது பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது. இதனால் தமது இராணுவ முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மறைத்துக்கொண்ட விடுதலைப்புலிகள் சமாதான காலத்திலும் ஆயுத கொள்வனவிலும் புதிய போராளிகளை இணைக்கிறார்கள் என்று குற்றம் சாட்டினார்கள். இதன் ஒரு கட்டமாக எழுந்த அழுத்தம் காரணமாக சமாதான தூதுவர்களாக இருந்த நோர்வேயின் சமாதான அதிகாரிகள் வன்னியில் உள்ள விடுதலைப்புலிகளின் கடற்படையின் படகு கட்டுமானங்களை நேரில் சென்று பார்வையிடுகிறார்கள்.

கடற்புலிகள் தமது படகுகளின் வடிவங்களையும் தாக்குதல் படகுகளையும் படகு கட்டுமானங்களையும் அவர்களுக்கு கட்டியதோடு கடலில் அதன் செயற்பாடுகளையும் செய்து காண்பித்தார்கள். இவை தொடர்பான தகவல்கள் சிறிலங்கா படையினரை சென்றடைகின்றன இதே நேரம் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ படகுசேவை ஊடாகவும் விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் பலத்தினை சிறிலங்கா படைபுலனாய்வாளர்கள் ஆராய்கின்றார்கள். அத்துடன் சிறிய படகுகளில் சென்று எதிரிக்கு பாரிய இழப்புக்களை கொடுக்கலாம் என்றும் ஏற்கனவே கடல்புலிகள் வெளிப்படையாக காட்டியிருந்தார்கள். இதன் பிரகாரம் புதிதாக சிறிலங்கா கடற்படையின் தரை இறக்கும் படகணிப் படகுகள் கடல்புலிகளின் சிறிய ரக தாக்குதல் படகு போன்ற வடிவத்தில் உருவாக்குகின்றார்கள். அவை தான் பின்னாளில் கடற்புலிகளுடன் மோதிய அரோ வகை படகுகள். கடல்புலிகளின் படகுகளை பார்த்தே இந்த படகுகளை சிறிலங்கா படையினர் வடிவமைத்து கொண்டார்கள். இந்த அரோ வகை படகுகளில் சில நவீன வசதிகளை சிறிலங்கா கடற்படையினர் ஏற்படுத்தினார்கள். இதன் நவீன கட்டுமானத்திற்கு ஜப்பான் நாட்டின் உதவிகள் கிடைத்திருந்தது. இவ்வாறான சுமார் நூறு வரையான அரோ படகுகளை கடல்புலிகளை எதிர்ப்பதற்காக என்றே சிறிலங்கா படையினர் உருவாக்கி இருந்தார்கள்.

இதே நேரம் கிழக்கில் திருகோணமலையில் பல அரசியல் பணிகளில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டார்கள். சமாதான காலத்தை பயன்படுத்தி சம்பூர் ஈசிலம்பற்று வெருகல் போன்ற பிரதேசங்களில் வீதிகள் பாலங்கள் புனரமைக்கப்படுகின்றன. இந்த புனரமைப்புக்கு சிறிலங்கா அரசே உதவுகின்றது. இதனூடாக படையினர் புலிகளின் நிர்வாக அலகுகளை கண்காணிக்கின்றார்கள். இதனிடையே ஒட்டுக்குழுக்களின் துரோகத்தனமும் ஊடுருவல்களும் தலைதூக்குகின்றன. இவற்றையும் விடுதலைப்புலிகள் முறியடிக்கின்றார்கள். இந்த முறியடிப்பில் திருகோணமலை மாவட்டத்தின் இராணுவ புலனாய்வு பொறுப்பாளராக மாவீரர் லெப் கேணல் அறிவு திறம்பட செயல்படுகிறார். அத்துடன் அங்குள்ள மாவீரர் குடும்பங்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கான உதவிகள் வழங்கப்படுகின்றன. பாடசாலை செல்லாத வரிய மாணவர்கள் இனங்காணப்பட்டு கல்வி கழகம் ஊடாக அவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு பாடசாலைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர். பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை இனம்காணப்பட்டு உயர்தரம் படித்த தொண்டர் ஆசிரியர் ஊடாக கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். மருத்துவ பிரச்சனை இனம்காணப்பட்டு வன்னியில் இருந்து தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினை வரவழைக்கப்பட்டு மருந்துபொருட்கள் வழங்கப்பட்டு மக்களின் நோய்கள் தீர்க்கப்படுகின்றன. கடல்புலிகளின் ஏற்பாட்டில் சங்கங்கள் ஊடாக கடல் தொழிலாளர்களுக்கு தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டு தொழில் வாய்ப்பு ஊக்குவிக்கப்படுகின்றது சம்பூர் வெருகல் பிரதேச மக்கள் வளமான மக்களாக மாற்றம் கண்டு வந்து கொண்டு இருந்தார்கள்.

அத்துடன் பொருண்மிய கட்டமைப்பு உருவாக்கப்படுகின்றது. மக்களின் சீர்திருத்தத்தை கண்காணிக்க தமிழீழ காவல்துறை தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தியது நீதி நிர்வாகம் அங்கு கொண்டு செல்லப்படுகின்றது. மக்களிடையேயான பிணக்குகளுக்கு தீர்வு காணப்படுகின்றது. பிரச்சனை களையப்படுகின்றது. விடுதலைப்புலிகளின் இந்த சீரான நிர்வாக கட்டமைப்பு அயல் பிரதேசங்களில் குடியேற்றப்பட்டிருந்த சிங்கள மக்கள் மத்தியில் அவமானத்தையும் கோவத்தையும் ஏற்படுத்துகின்றது. இதனால் சில சிங்கள கிராமத்தின் முதன்மையானவர்கள் தமிழ் மக்களுக்கு எதிரான தமிழ் மக்களுடன் விரோதத்தை ஏற்படுத்தக்கூடிய சூழ்ச்சி வேலைகளில் ஈடுபட்டார்கள். மூதூரை பொருத்தமட்டில் மூதூர் இஸ்லாம் மக்களை கொண்ட நகரமாக காணப்படுகின்றது.

தமிழ் முஸ்லிம் மக்களிடையேயான பிரச்சனைகள் தமிழீழ விடுதலைப்புலிகளால் தீர்க்கப்பட்டு இரு பகுதியினருக்கும் இடையிலான உறவு அங்கு வளர்க்கப்படுகிறது. இவ்வாறு விடுதலைப்புலிகளின் கட்டுமானங்கள் அங்கு திறம்பட செயல்படுகின்றன. இந்நிலையில் வன்னியில் இருந்த தளபதி பால்ராஜ் தலைவர் அவர்களால் திருகோணமலை அனுப்பிவைக்கப்படுகிறார்.



**தொடரும்...**

# விவசாயிகளின் தலையில் மண் அள்ளிப்போடும் வவுனியா அரச அதிபரும் அவரின் அடிவருடிகளும்

## வவுனியா மாவட்ட கமக்கார ஒழுங்கமைப்பு சம்மேளத்தின் தலைவர் செல்லத்தம்பி ஸ்ரீதரன் அதிரடி!

**கடந்தவார தொடர்ச்சி...**

எனவே அந்த விதமான வெளிநாடுகளில் இருக்கக்கூடிய அந்த திட்டங்களைத்தான் நாங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டு ரயில் நிலையத்திற்கு முன்பு எங்களது மாவட்ட சம்மேளத்தினுடைய காரியாலயத்திற்கு முன்னுக்கு நாங்கள் இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்து எங்களது மரக்கறி உற்பத்தியினை புகையிரத நிலையம் ஊடாக வத்தளை கொழும்பு எல்லா இடத்திற்கும் அனுப்பி வைப்பதற்குரிய திட்டங்களையும் தீட்டியிருக்கின்றோம்.

**கேள்வி : வவுனியாவிலே ஒரு பொருளாதார மத்திய மையம் அமைவதாக வடமாகாணசபை நடைமுறையில் வந்தபொழுது உங்களுக்குத் தெரியும் நீங்களும் அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தீர்கள். தாண்டிக்குளத்தில் அந்த பொருளாதார மத்தியம் வரக்கூடாது என்று போராட்டங்கள் நடத்தியபொழுது அதில் நீங்களும் தீவிரமாக ஈடுபட்டிருந்தீர்கள். ஆனால் இன்று அது பிரயோசனமற்ற ஒரு பொருளாதார மத்திய மையமாக அந்த இடத்திலே அமைக்கப்பட்டிருக்கின்றது எனவே இது தொடர்பாக ஏதாவது நீங்கள் உங்களது விவசாய பொருட்கள் உற்பத்தியை ஊக்குவித்து சந்தைப்படுத்தி விற்பனை செய்வதற்கு ஏதாவது மாற்று நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றீர்களா?**

பதில் : எங்களைப் பொறுத்தவரையில் அருமையான ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது ஓமந்தையில் அதற்குரிய 10 ஏக்கர் காணியும் ஒதுக்கப்பட்டிருந்தது. இன்று கனடாவோ அமெரிக்காவோ வேறு நாடுகளோ ஒரு நகரம் இருந்தால் 5 வருடங்களுக்கு பின்னர் இன்னொரு உப நகரம் உருவாகும்.

அந்த நகரத்திலே ஒரு 500 வீடுகள் ஒரு பெற்றோல் செட் ஒரு பாடசாலை ஒரு வங்கி என உருவாகி அந்த இடம் மீண்டும் ஒரு சிட்டியாக மாறும் இது தான் அந்த நாட்டின் திட்டம். அதே போன்று வவுனியா மாவட்டத்திலே ஒரு உப நகரம் இருக்கின்றதா சிந்தித்துப் பாருங்கள். ஒரு உபநகரம் இல்லை அந்த உபநகரம் ஓமந்தையில் அமையும் விதமாக எல்லா ஒழுங்குகளும் செய்யப்பட்டிருந்த வேளையில் எங்கிருந்து இந்த பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றது என்றால் இந்த நெடுங்கேணி பகுதி கனகராயன் குளம் ஓமந்தை பகுதியிலிருந்து வருகின்ற மரக்கறிகள் தான் டவுனை அண்டி வந்துகொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு போராடி இங்கிருந்து மாகாண சபை வரையும் இரண்டு முறை பேரூந்து பிடித்து சென்றோம் 40 பேருக்கு மேல். தாண்டிக்குளம் உகந்த இடமில்லை காரணம் என்னவென்றால் தாண்டிக்குளத்திலே நாங்கள் போட்டோமானால் அந்த வாகனங்கள் பக்கத்தில் இருக்கக்கூடிய வீடுகளிற்கு முன் நிறுத்தி எதிர்காலத்தில் குடும்ப பிரச்சனைகள் வரக்கூடியளவு சூழ்நிலை உருவாகும்.

ஆனால் ஓமந்தையில் அவ்வாறான இடமில்லை. அதற்கு தகுந்த இடத்தை ஒதுக்கீடு செய்து மிகவும் கஷ்டப்பட்டு போராடி ஆனால் அரசியல்வாதிகளின் அசமந்த போக்கு கொண்டுபோய் தேக்கவத்தையில் அதை கட்டியிருக்கின்றார்கள். இதில் சம்மந்தப்பட்ட அரசியல்வாதிகள் தான் பதில்கூற வேண்டும். ஆனால் நாங்கள் மீண்டும் எங்களுக்கு கிடைக்கக்கூடிய இந்த பொருளாதார வர்த்தக மையத்தை இழந்தும் நாங்கள் ஓமந்தையில் தற்பொழுது ஒரு இடத்தில் இங்கிருந்து உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை எடுத்து ஓமந்தை ரயில் நிலையத்தின் ஊடாக இதை அனுப்புவதற்குரிய ஒழுங்குகளை செய்துகொண்டிருக்கின்றோம்.

# வாழ்க்கை தத்துவங்கள்

**பிறரிடம் கையேந்துபவனை விட பிறருக்கு உதவ மனமில்லாமல் இல்லை என்று மறுப்பவனே இழிந்தவன்.**

**உடல் தூய்மையை விட மனத்தூய்மையே அவசியமானது. இதயத்தை நல்ல எண்ணத்தால் நிரப்பு.**

**பிறரின் இன்பத்தைக் கண்டு மகிழ்ச்சி கொள். மற்றவர் துன்பத்தில் பங்கேற்று உதவி செய்.**

**பொருள் இல்லாதவன் ஏழையல்ல. எப்போதும் மனதில் ஆசையைச் சுமந்து திரிபவனே ஏழை.**

**அறிவு என்னும் கதவு திறந்தால் மட்டுமே அறியாமை என்னும் திரை அகலும்.**

**ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் போல நல்லவனும் ஒரு தீய குணத்தால் ஒழுக்கமற்றவனாக ஆகி விடுவான்.**

**பிறருடைய குற்றம் காண்பதிலும் பிறரைக் குறை சொல்வதிலும் நேரத்தை செலவிடாதீர்கள்.**

**மேடு பள்ளம் நிறைந்தது தான் உலகம். அதுபோல இன்ப துன்பம் நிறைந்தது தான் மனித வாழ்க்கை.**

**மனிதனின் உடன்பிறந்த இயல்பு ஆசை. அதை படிப்படியாக திருத்திக் கொண்டால் மட்டுமே வாழ்வில் உயர முடியும்.**

**யாரையும் வெறுப்பது கூடாது. அனைவரிடமும் அன்பு காட்டுங்கள். தனித்து வாழாதீர்கள். மனம் விட்டு பிறரிடம் பழகுங்கள்.**

**எல்லாருக்கும் மதிப்பளிப்பதோடு, அவர்களின் வாழ்வில் குறுக்கிடாமல் இருப்பதே சிறந்த நாகரிகம்.**

**நல்லவர்களுடன் நட்பு கொள்ளுங்கள். நல்லறிவு தரும் நூல்களைப் படியுங்கள்.**

**நாக்கைக் கட்டுப்படுத்தினால் உள்ளத்தையும், உடலையும் எளிதாக வசப்படுத்த முடியும்.**

**பெற்ற தாயைப் போற்றுங்கள். அவளின் தியாகமே உங்களை ஆளாக்கியது என்பதை மறவாதீர்கள்.**

**கட்டுப்பாடான வாழ்க்கை, நல்லொழுக்கம் இருந்து விட்டால் நம் வாழ்வே சொர்க்கமாக மாறி விடும்.**

**நடந்ததையே எண்ணி வருந்தாதீர்கள். நிகழ்காலத்தைப் பயனுடையதாக்கும் முயற்சியில் ஈடுபடுங்கள்.**

**நல்லது கெட்டதை பகுத்தறியும் விவேகத்தைக் கற்றுக் கொடுப்பதே உண்மையான கல்வியாகும்.**

**06ஆம் பக்க தொடர்ச்சி...**

ராஜபக்ஷர்கள் ஜனவசிய அரசியலை (Populist politics) முன்னெடுப்பவர்கள் போன்று வெளித்தோற்றத்துக்கு ஒரு மாயையைக் காட்டிக்கொண்டு அடிப்படையில் அதிகார வெறி பிடித்தவர்களாகவே செயற்பட்டு வந்திருக்கிறார்கள். அதிகார மமதை அவர்கள் சகலரிடமும் குடிகொண்டிருந்தது.

மஹிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது பதவிக்காலத்தின் தொடக்கத்தில் அரசியலமைப்புக்கான 18ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்து ஜனாதிபதி ஒருவருக்கு இருந்த இரு பதவிக்கால வரையறைகளை ஒழித்தார். எத்தனை பதவிக்காலத்துக்கும் தேர்தலில் தான் போட்டியிட்டு தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பதற்கு விரும்பினார். இரண்டாவது பதவிக்காலத்தில் இரு வருடங்கள் எஞ்சியிருந்த நிலையில் 2010 ஜனவரியில் உரிய காலத்துக்கு முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை அவர் நடத்தினார். ஆனால், தனது அமைச்சர்களில் ஒருவரிடம் தான் அந்தத் தேர்தலில் தோல்வியடைய வேண்டி வரும் என்று அவர் ஒருபோதும் நினைத்திருக்கமாட்டார்.

அந்தத் தேர்தல் தோல்வியுடன் மஹிந்த அரசியலில் இருந்து ஓய்வு பெற்றிருந்தால் கௌரவமாவது மிஞ்சியிருக்கும். அரசியல் அதிகாரப்பசி அவரை விடவில்லை. இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்தவர்களில் பதவியில் இருந்து இறங்கிய பின்னர் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக வரும் தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்திக்காட்டியவர் மஹிந்தவே. அவரைத் தொடர்ந்து மைத்திரிபால சிறிசேனவும் இப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தங்களுக்கு நிவாரணம் கோரி மக்கள் ஆரம்பித்த வீதிப்போராட்டங்கள் இன்று அரசியல் புரட்சியொன்றின் பரிமாணங்களை எடுத்து 'ஆட்சிமுறைமை' மாற்றத்தை வேண்டிநிற்கின்றன. மக்கள் மத்தியிலும் இளைய தலைமுறையினர் மத்தியிலும் ஏற்பட்ட சிந்தனை மாற்றங்களை புரிந்துகொள்ள இயலாத நிலையில் மஹிந்த ராஜபக்ஷ இடைக்கால அரசாங்கம் அமைந்தாலும் அதற்கும் தானே பிரதமர் என்று மமதையுடன் பேசினார். மே 9 அலரிமாளிகைக்கு அழைத்துவரப்பட்ட தனது ஆதரவாளர்களை காலிமுகத்திடலுக்கு கட்டவிழ்த்துவிடுவதற்கு முன்னதாக உரையாற்றிய மஹிந்த "சவால்களைக் கண்டு அஞ்சுபவனல்ல இந்த மஹிந்த ராஜபக்ஷ" என்று மார்தட்டினார்.

ஆனால், காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது அரசாங்க அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களையடுத்து நாட்டின் பல பாகங்களிலும் வன்முறைகள் பரவிய நிலையில் சில மணித்தியாலங்களில் அவர் பிரதமர் பதவியில் இருந்து விலகும் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்க வேண்டியேற்பட்டது. நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்து அமைதியாக மக்கள் வாழ வழிவகுத்தவராக தன்னைப் பற்றி பெருமை கூறுகின்ற மஹிந்த ராஜபக்ஷ இறுதியில் இலங்கை எரிந்துகொண்டிருப்பதற்கு மத்தியிலேயே பதவியில் இருந்து இறங்கிய விசித்திரத்தைக் கண்டோம்.

சென்னையில் இருந்து வெளியாகும் இந்தியாவின் முக்கியமான ஆங்கிலப் பத்திரிகைகளில் ஒன்றான 'தி இந்து ' மே 11 மஹிந்த ராஜபக்ஷவின் வீழ்ச்சி குறித்து எழுதிய ஆசிரிய தலையங்கத்தின் இரு பந்திகள் ராஜபக்ஷ ஆட்சியை கச்சிதமாக வர்ணித்திருந்தன. அவை வருமாறு:

"இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வின் குடும்ப ஆட்சிக்கு எதிரான பரந்தளவிலான மக்கள் கிளர்ச்சியின் ஒரு பகுதியாக மூண்டிருக்கும் அசாதாரணமான வன்முறைகளுக்கு மத்தியில் அவரது பதவி விலகல் கடந்த ஒன்றரை தசாப்த காலத்தின் பெரும்பகுதி பூராவும் நாட்டில் ஆதிக்கம் செலுத்திக்கொண்டுவந்த அரசியல் குறியீடு (Political brand) ஒன்றின் சடுதியான வீழ்ச்சியைக் குறித்துநிற்கிறது.

"வீறுமிக்க தேசியவாதமும் பெரும்பான்மையினவாத அணிதிரட்டலும் என்றென்றைக்குமே முடிவற்றதாக இருக்கக்கூடிய ஆதரவுத் தளம் அல்ல என்பதும் மக்கள் பொருளாதார இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கும்போது அந்த ஆதரவு தளத்தினால் பயனில்லை என்பதுமே ராஜபக்ஷ குறியீட்டின் முடிவில் இருந்து வெளிப்படும் பெரிய செய்தியாகும்."

07ஆம் பக்க தொடர்ச்சி...

சனிக்கிழமை ஜனவரி 7 ஆம் திகதி மட்டக்களப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து செயற்படுகின்ற பங்காளி கட்சிகளை வெளியேற்றுவதா இல்லையா என்றவொரு கூட்டம் தற்பொழுது களுவாஞ்சிக்குடியில் உள்ள சாணக்கியனுடைய தலைமைக்காரியாலயத்தில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.

எனவே இவற்றையெல்லாம் பார்க்கின்ற பொழுது சாணக்கியன் என்பவரும் கூட பிள்ளையானுடன் இருந்து சிறிலங்கா சுதந்திர கட்சியிலே போட்டியிட்டு வந்த ஒருவர். அவரது பின்னணி பலவாறு இருக்கின்றது. அவர் இராணுவ புலனாய்வு கட்டமைப்புக்களுக்கு அல்லது NIB போன்ற புலனாய்வு கட்டமைப்பிற்கு அரசாங்கத்துடன் இணைந்து கடந்த காலங்களிலே டயஸ்போராக்களை பிளவுபடுத்துவதற்கு பணிபுரிந்தார் என்பது அவருடைய தனிப்பட்ட ஒரு விடயமாக புத்தகம் ஒன்று இருக்கின்றது.

அண்மையில் பலவிடயங்களை பிள்ளையான் அவர்கள்கூட இவர் எப்படியான நகர்வுகளை நகர்த்துகின்றார் என்ற விடயத்தையும் அவரிடமும் பல ஆதாரங்கள் இருப்பதாகவும் கூறியிருந்தார். சின்ன பிள்ளையினுடைய கதையை நாங்கள் கேட்டு செயற்படக்கூடாது எமது அரசியலை கொண்டுசெல்ல வேண்டும் என்று அவரோடு இணைந்து பயணித்த ஒருவரே இந்த கருத்தை கூறியிருந்தார். இதுவொருபுறத்தில் இருந்தாலும் தமிழ் தேசிய கூட்டமைப்பை பிளவுபடுத்துகின்ற அல்லது பிளவுபடுத்த துடிக்கின்ற எவராக இருந்தாலும் அவர்கள் அரசியல் ரீதியாக களைபிடுங்கப்படவேண்டியவர்களாகவே இருக்கின்றார்கள்.

ஏனென்றால் வடகிழக்கிணைந்ததே இந்த தமிழர் தாயகம். தமிழர் தாயகத்தை பிரித்துவிட வேண்டும் என நினைப்பது மற்றும் அதற்காக வரிசைகட்டிக்கொண்டு செயற்படுகின்ற யாராகவும் இருக்கலாம் அவர்கள் களைபிடுங்கப்பட வேண்டியதொரு கட்டத்தில் தான் தற்பொழுது இந்த அரசியல் பயணம் தொடர்ந்துகொண்டு இருக்கின்றது.

தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு தமிழினத்தின் உரிமைக்காக போராடுகின்ற தமிழ் தரப்பு சிந்தித்து செயற்படவேண்டும் என்பதனையே நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

# மகளிர் பக்கம்

## முகப்பொலிவை கூட்டும் சந்தன பேஸ் பேக்

பெண்கள் தங்கள் சருமத்தின் அழகைப் பராமரிப்பதற்கு பல கீரிம்களை உபயோகிப்பதால் தோல் வரண்டு, அலர்ஜி போன்ற பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இயற்கை பொருள்களை வைத்து செய்யப்படும் மருத்துவம் நல்ல தீர்வை தந்திருக்கிறது. மேலும் சருமத்தில் ஏற்படும் பிரச்சனைகளை எளிதில் நீக்க வல்லது.

**தக்காளி:**

சந்தனப் பொடியில் தக்காளியை அரைத்து கலந்து, வேண்டுமெனில் சிறிது முல்தானி மெட்டியையும் சேர்த்து கலந்து, முகத்திற்கு ஃபேஸ் பேக் போடலாம்.

**எலுமிச்சை சாறு:**

எலுமிச்சை சாற்றுடன் சந்தனப் பொடியை சேர்த்து கலந்து, முகத்திற்கு ஃபேஸ் மாஸ்க் போட்டால், சருமத்தில் உள்ள இறந்த செல்கள் நீங்குவதோடு, பருக்கள் வராமலும் இருக்கும்.

**தயிர்:**

தயிர் ஒரு சிறந்த கிளின்சர் என்று சொல்லலாம். எனவே அந்த தயிரை சந்தனப் பொடியில் சேர்த்து கலந்து, முகத்திற்கு மாஸ்க் போட்டால், சருமம் மென்மையாவதோடு, வெள்ளையாகும்.

**முட்டை மற்றும் தேன்:**

மற்றொரு சந்தன ஃபேஸ் பேக் தான் இது. இதற்கு முட்டையை நன்கு அடித்து, தேன் மற்றும் சந்தனப் பொடியை சேர்த்து கலந்து, முகத்தில் தடவி ஊற வைத்து கழுவினால், சருமத்தில் உள்ள சுருக்கங்கள் நீங்கி, அழுக்குகள் அனைத்தும் வெளியேறி, சருமம் அழகாக இளமையுடன் காணப்படும்.

**மஞ்சள் தூள்:**

சந்தனப் பொடியை மஞ்சள் தூள், ஒரு துளி எலுமிச்சை சாறு மற்றும் பால் ஊற்றி கலந்து, சருமத்தில் தடவி ஊற வைத்து கழுவ வேண்டும். இதனால் முகமானது பொலிவோடு காணப்படும்.

**முல்தானி மெட்டி:**

சந்தனப் பொடியை முல்தானி மெட்டி பவுடருடனும் சேர்த்து ஃபேஸ் பேக் போடலாம். அதற்கு 1/2 டீஸ்பூன் முல்தானி மெட்டி மற்றும் 1/2 டீஸ்பூன் சந்தனப் பொடியை சேர்த்து, தயிர் ஊற்றி கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

**ரோஸ் வாட்டர்:**

பொதுவாக சந்தன ஃபேஸ் பேக்கில், சந்தனப் பொடியை ரோஸ் வாட்டரில் கலந்து, சருமத்திற்கு தடவி ஊற வைத்து கழுவினால், சருமத்தில் உள்ள அழுக்குகள் மற்றும் இறந்த செல்கள் நீங்கி, சருமம் பொலிவோடு காணப்படும்.





## கர்ப்ப காலத்தில் பெண்கள் செய்யக்கூடாத சில விஷயங்கள்

கர்ப்ப காலத்தில் பெண்கள் செய்யக்கூடாத சில விஷயங்கள் உள்ளது. ஏனெனில் அப்படி செய்தால் அது கருவை பாதிக்கும். எனவே இவற்றை அறிந்து செயற்பட வேண்டும். அந்த வகையில் கர்ப்ப காலத்தில் கண்டிப்பாக தவிர்க்க வேண்டிய விஷயங்களை பற்றி பார்ப்போம்

**மசக்கையை தடுக்க மாத்திரைகள் உட்கொள்வதை தவிர்க்கலாம்.**

**தூங்கிக்கொண்டிருக்கும் கர்ப்பிணிகளை சத்தம்போட்டு பயமுறுத்தி எழுப்பக்கூடாது.**

**சிறுநீரை அடக்குவதால் சிறுநீரகக் கற்கள், சிறுநீர் பாதையில் தொற்று ஏற்படும்.**

**எண்ணெய் குளியல், எண்ணெய் மசாஜ் ஆகியவற்றை தவிர்க்க வேண்டும்.**

**கர்ப்பிணி பெண்கள் நல்ல நார்ச்சத்து நிறைந்த உணவுகளை தினமும் எடுத்துக் கொள்ள வேண்டும்.**

**ஆட்டிறைச்சி, பன்றி, மாட்டிறைச்சி போன்ற சிவப்பு மாமிச வகைகளை தவிர்ப்பது நல்லது.**

**சீஸ் அதிகம் கலந்த உணவையும் தவிர்க்க வேண்டும். இவை ஜீரணம் ஆக அதிக நேரம் எடுப்பதோடு, சில உபாதைகளையும் உண்டாக்கக் கூடும்.**

**பகலில் தூங்குதல் கூடாது. இதனால் இரவில் தூக்கம் வராமல் மன உளைச்சல் ஏற்படும்.**

**உயரமான கட்டிடங்களுக்கு செல்லுதல், படியில் அடிக்கடி ஏறுதல், காலடி சத்தம் கேட்கும்படி பலமாக நடப்பது, வாகனங்களில் பயணம் செய்வது, தலைக்கு மேல் எடை தூக்குவது போன்றவற்றை செய்யக் கூடாது.**

**காபி மற்றும் தேநீர் போன்றவற்றை முடிந்த வரை தவிர்ப்பது நல்லது. இவை உடலில் ரத்தசோகை மற்றும் வேறு சில உபாதைகளை உண்டாக்கக் கூடும்.**

## முகத்தில் உள்ள கரும்புள்ளிகளை நீக்க ஹோம் டிப்ஸ்

முகத்தில் தோன்றும் கரும்புள்ளிகளை வீட்டில் இருக்கும் பொருட்கள் கொண்டே அகற்ற முடியும். பெரும்பாலும் கரும்புள்ளிகள் முகத்தில் அதிகப்படியான எண்ணெய் பசையாலும் அல்லது வறண்ட சருமத்தாலும் வரக்கூடும்.

எலுமிச்சை சாறுடன், வெள்ளை சர்க்கரை சேர்த்து முகத்தில் தேய்த்து 2 - 3 நிமிடங்கள் மசாஜ் செய்யலாம்.

உருளைக்கிழங்கை பேஸ்ட் போல அறைத்து 15 நிமிடங்கள் வரை முகத்தில் வைத்திருந்து குளிர் நீரில் கழுவலாம்.

கொத்தமல்லி தழையுடன் மஞ்சள் தூள் சேர்த்து அறைத்து முகத்தில் தடவி சிறிது நேரத்திற்கு பின்னர் கழுவலாம்.

வெறும் எலுமிச்சை சாறினை எடுத்து பஞ்சில் நனைத்து முகத்தில் தேய்த்து 5 - 6 நிமிடங்கள் வைத்து பின்னர் கழுவலாம்.

தயிர் மற்றும் எலுமிச்சை சாறை கலந்து தடவி வரலாம்.

வெந்தயக்கீரையை அரைத்து முகத்தில் தடவி காயும் வரை அப்படியே விட்டு பின்னர் கழுவ வேண்டும்.

## முருங்கை கீரையின் மருத்துவ பயன்கள்

முருங்கைக் கீரையை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொண்டால் நோய் விலகியே இருக்கும். முருங்கை இலையில் அதிக அளவில் உள்ள ஆன்டி ஆக்சிடண்ட் உடல் பருமன், சர்க்கரை நோய், ரத்த சோகை, இருதய நோய்கள், ஆர்த்தரிட்டிஸ், கல்லீரல் நோய்கள், தோல் நோய்கள், ஜீரணக் கோளாறு உள்ளிட்டவற்றைக் குணப்படுத்தும்.

முருங்கைக் கீரையை அடிக்கடி சாப்பிடுபவர்களுக்கு பற்கள் உறுதியாகும். ஈறுகள் சம்பந்தமான குறைபாடுகள் நீங்கும். உடல் வெப்பத்தால் ஏற்படும் வாய் புண்கள் போன்றவை நீங்கும்.

முருங்கைக் கீரையை அடிக்கடி சாப்பிட்டு வருபவர்களுக்கு தோலில் சுருக்கங்கள் ஏற்படுவது குறைந்து, அனைத்து விதமான தோல் வியாதிகளும் விரைவில் நீங்க உதவுகிறது.

முருங்கை கீரையை வேகவைத்து அதன் சாற்றை குடித்து வந்தால் உடல் சூடு தணிவதுடன், மலச்சிக்கல் பிரச்சனை விரைவில் நீங்கும். முருங்கை இலைகளை உருவி, அதன் காம்புகளை நீக்கி விட்டு, அந்த முருங்கை இலைகளை சேர்த்து மிளகு ரசம் வைத்து சாப்பிட்டு வந்தால், கை, கால் உடம்பின் வலிகள் அனைத்தும் தீரும்.

முருங்கை இலைகளை நெய்யில் வதக்கி தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் ரத்த சோகை உள்ளவர்களின் உடம்பில் நல்ல ரத்தம் அதிகரிக்கும். உடல் பலம் பெறும். மேலும் ஒரு சில குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு தாய்ப்பால் சுரப்பு நின்று விடுகிறது. அவர்கள், முருங்கை இலையை கொண்டு தயாரிக்கப்படும் பதார்த்தத்தை சாப்பிட்டு வந்தால், தாய்ப்பால் சுரப்பு அதிகரிக்கும்.

ரத்தத்தில் ஹீமோகுளோபின் சத்துக்கள் அதிகரிக்கவும் இரும்புச்சத்து இன்றியமையாததாக இருக்கிறது. இந்த இரும்புச் சத்து முருங்கை கீரையில் அதிகம் உள்ளன. எனவே குறைந்த பட்சம் வாரம் ஒரு முறையாவது முருங்கைக்கீரையை பக்குவம் செய்து சாப்பிட்டு வருவது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது.



## சீத்தாப்பழத்தின் மருத்துவ பண்புகள்!

**சீத்தாப்பழத்தின் தோல், விதை, இலை, மரப்பட்டை என அனைத்துமே அரிய மருத்துவ பண்புகளை கொண்டது. குழந்தைகளுக்கு சீத்தாப்பழம் கொடுத்து வர எலும்பு உறுதியாகும், பல்லும் உறுதியாகும். சீத்தாப்பழம் ரத்த உற்பத்தியை அதிகரித்து உடலுக்கு வலிமை தருகிறது.**

**சீத்தாப்பழத்தை உட்கொண்டால் தலைக்கும் மூளைக்கும் செல்லும் ரத்த ஓட்டம் சீராகும். இதன் மூலம் குழந்தைகளின் கவனிக்கும் திறன், நினைவாற்றல் அதிகரிக்கும்.**

**சீத்தாப்பழ விதைகளை பொடியாக்கி சம அளவு பொடியுடன் பாசிப்பயிறு மாவு கலந்து தலையில் தேய்த்து குளித்து வர முடி மிருதுவாகும்.**

**சிறிதளவு வெந்தயம், சிறுபயிறு இரண்டையும் இரவு ஊறவைத்து பின்னர் காலையில் அரைத்து, இதோடு சீத்தாப்பழ விதைப்பொடியை கலந்து தலையில் தேய்த்து, ஊறிய பின்னர் குளித்து வர தலை குளிர்ச்சி பெறும், முடியும் உதிராது, பொடுகு காணாமல் போகும்.**

**சீத்தாப்பழ விதை பொடியோடு கடலை மாவு கலந்து எலுமிச்சை சாறில் குழைத்து தலையில் தேய்த்து ஊறிய பின்னர் குளித்து வர முடி உதிராது.**

**சீதாப்பழ மரத்தின் இலைகள் மருத்துவகுணம் கொண்டவை. இலைகளில் இருந்து தயாரிக்கப்பட்ட கசாயம் வயிற்றுப் போக்கை கட்டுப்படுத்துகிறது.**

# தமிழ் இனத்தின் விடுதலைக்காக போராடிய ஆயுத கட்சிகளின் இன்றைய நிலை?

தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்காக ஆரம்பகாலத்தில் ஆயுதமேந்திப்போராடிய ஆயுதக்கட்சிகளாக ரெலோ, புளொட், ஈரோஸ், தமிழீழ விடுதலைப்புலிகள் என்பன உள்ளடக்கப்படுகின்றன. உமா மகேஸ்வரன் தலைமையில் புளொட், பத்மநாபாவின் தலைமையில் ஈ.பி.ஆர்.எல்.எவ், பிரபாகரன் தலைமையில் தமிழீழ விடுதலைப்புலிகள், பாலகுமார் தலைமையில் ஈரோஸ், சிறிசபாரத்தினம் தலைமையில் ரெலோ என இத்தலைவர்கள் ஒரே குறிக்கோளுடன் செயற்பட்டவர்கள்.

இந்தியாவின் கைக்கூலிகளாகச் செயற்பட்டதன் விளைவு ஏனைய ஆயுதக்கட்சிகளின் தலைமைகளை ஓரங்கட்டி தமிழீழ விடுதலைப்புலிகளும், ஈரோசின் ஒரு சாராரும் இறுதிவரை சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகப் போராடினார்கள். இக்காலகட்டத்தின் போது ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ஈ.பி.டி.பி போன்ற இயக்கங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்தார்கள். இவர்களுடன் விடுதலைப்புலிகளிலிருந்து பிரிந்து சென்ற கருணா, பிள்ளையான் போன்றவர்களும் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்து விடுதலைப்புலிகளுக்கு துரோகம் செய்தார்கள்.

அன்று இவர்கள் இழைத்த துரோகத்திற்கு இன்று பிராயச்சித்தம் தேடும் வகையில் இவ்வாயுதக்கட்சிகள் செயற்பட முயற்சிக்கின்றன. ஆனால் இவர்களின் அட்டகாசங்களை மக்கள் நன்கு அறிவார்கள். ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ, ஈ.பி.டி.பி போன்ற கட்சிகள் இதுவரையில் வகைதொகையின்றி தமிழ் மக்களைக் கொலை செய்துள்ளனர். அதற்கான ஆதாரங்களும் இருக்கிறது.

தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலைக்கும் இக்கட்சிகள் மக்களுடன் இணைந்து போராட்டங்களைச் செய்வதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது. நல்லாட்சி என்று கூறிக்கொண்டு தமிழ் இயக்கங்களை பலவீனப்படுத்தும் மற்றொரு செயற்பாட்டை அரசு மறைமுகமாகச் செய்து வருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கம் உள்வாங்கிக்கொள்கிறது எனக்கூறுகின்ற பாட்டாளிக் கட்சிகள் தாம் உள்வாங்கப்படுவதை மறைத்து ஏனையவர்கள் மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

ஏற்கனவே தமிழீழ விடுதலைப்புலிகளைத் தவிர ஏனைய ஆயுதக்கட்சிகள் எவ்வாறு உள்வாங்கிக்கொள்ளப்பட்டது என்ற ஒரு சிறு விடயத்தைப் பார்க்கவேண்டிய தேவை இருக்கிறது. ஆதாரம் இல்லாமல் போலியான செய்திகளை வெளியிடுகிறார்கள் என பலரும் நினைக்கக்கூடாது என்பதற்காக குறிப்பாக ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற இயக்கங்கள் பொது மக்களிடமும், வியாபார கடைகளில் இருந்தும் பணம் வசூலித்தார்கள் என்பதற்கு போதிய ஆதாரங்கள் இருக்கிறது. சமூக அமைப்புக்கள் என்று கூறிக்கொண்டு இவ்வாயுதக்கட்சிகள் எல்லாம் ஈ.பி.டி.பி உட்பட மக்கள் மத்தியில் சென்று ஒரு ஆர்ப்பாட்டத்தை அல்லது சமூகங்களுக்கிடையிலான ஒரு செயற்பாட்டை முன்னெடுக்கும் போது இவர்களின் முன் வருவதற்கு மக்கள் பயப்படுகிறார்கள்.

மக்கள் புரட்சி என்பதும் ஒரு சமூக நீதிக்கானப் போராட்டம் என்பதும் மக்களாலேயே மேற்கொள்ளப்படவேண்டும். ஒரு குழு என்ற போர்வையில் அரசியல் கட்சி சார்ந்தவர்கள் தமது கட்சிகளை வளர்த்தெடுக்கும் நோக்கில் செயற்படுபவர்கள் பொது அமைப்புக்களில் இருக்கிறார்கள். இவர்களின் செயற்பாடுகள் பக்கச்சார்பாகவே இருக்கிறது. ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியைப் பொறுத்தவரையில் ஆரம்பகட்டத்தில் ஒன்றாக இருந்து அதன் பின்னர் வரதர் அணி, சுரேஸ் அணி, டக்ளஸ் தேவானந்தா அணி, ஈரோஸ் அணி என நான்காகப் பிரிவடைந்தது. தற்போதைய போராட்டங்களில் இவ் நான்கு கட்சியின் பிரமுகர்களுமே கலந்து கொள்கிறார்கள். இனம் இனத்தையே சேரும் என்பதைப்போல் தற்போதைய விடயங்கள் நடைமுறைக்கு வந்துவிட்டது. ஆரம்பத்தில் குறிப்பிட்டதன் பிரகாரம் தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராட புறப்பட்ட இயக்கங்களை ஊக்குவித்து உற்சாகம் கொடுத்து அனைத்து வசதிகளையும் வழங்கி இலங்கை அரசுக்கு எதிராக போரை நடத்துவதற்கு இந்திய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கியது. ஆனால் துரதிஷ்டவசமாக விடுதலைப்புலிகளினால் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட ஏனைய இயக்கங்கள் மீதும் பயங்கரவாதத் தடைச்சட்டம் பாய்ந்தது. அதன் பின்னர் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எப் போன்ற இயக்கங்கள் இக்கொலைக்கும் எமக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை எனக்கூறி, விடுதலைப்புலிகளுக்கு எதிராக இந்திய இராணுவத்துடன் இணைந்து போரை ஆரம்பித்தது. புளொட் இக்காலகட்டத்தில்தனித்து நின்றதன் காரணமாக கல்லாண்டகுளம், தம்பனை, முசல்குட்டி, முள்ளிக்குளம் போன்ற பகுதிகளில் விடுதலைப்புலிகள் புளொட் கட்சிக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொண்டனர். இத்தாக்குதல்கள் இலங்கை இராணுவத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதன் பின் புளொட் கட்சியும் விடுதலைப்புலிகளுக்கு எதிரானத் தாக்குதல்களை மேற்கொண்டது. ஈ.பி.டி.பி டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொண்டது. இது வரலாற்றுச் சுருக்கம்.

இந்திய இராணுவத்தினரால் உள்வாங்கப்பட்ட ஆயுதக்கட்சிகள் விடுதலைப்புலிகளுக்கு எதிராக போராட்டங்களை மேற்கொண்டபோது அனைத்து ஆயுதக்கட்சிகளும் ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டும் என்ற கோரிக்கை இந்திய இராணுவத்தால் முன்வைக்கப்பட்டது. அதற்கமைய ஆயுதங்களை ஒப்படைத்த அனைத்து ஆயுதக்கட்சிகளும் அநாதரவற்ற நிலையில் நிற்கும் வேளையில் மீண்டும் விடுதலைப்புலிகளுக்கு எதிராக தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது ஈழக்கனவு சிதைக்கப்பட்டது. இலங்கையின் நாலாப்புறங்களிலும் தமிழ் மக்கள் இறந்து கொண்டிருந்தனர். இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்துடன் இலங்கை அரசுடன் நட்புறவினை பேணிக்கொள்ள முடியும் என்ற எண்ணத்துடன் செயற்பட்ட விடுதலைப்புலிகள், இந்திய இராணுவம் இந்நாட்டை விட்டு வெளியேறும் வரை தமது போராட்டங்களை நடத்தியது. இதற்கு இலங்கையின் அப்போதைய ஆட்சியாளர் பிரேமதாசா அரசே ஆயுதங்களை வழங்கியது.

விடுதலைப்போராட்டத்திற்கு ஆதரவு வழங்கிய இந்திய அரசாங்கத்தையும், விடுதலைப்புலிகளையும் பிரித்தாளும் ஒரு தந்திரோபாயத்தை இலங்கை அரசு மிக நுட்பமாக மேற்கொண்டது. இதனது விளைவு இறுதியில் முள்ளிவாய்க்கால் வரை போராட்டங்கள் கொண்டு செல்லப்பட்டது. பொதுவாக சகோதரப் படுகொலைகள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் விடுதலைப்புலிகள் இறுதிவரை தமது ஈழக்கனவின் இலட்சியத்தோடு போராடியவர்கள். இந்திய இராணுவம், இலங்கை இராணுவத்துடன் இவ்வாயுதக்கட்சிகள் இணைந்து செயற்பட்ட காலத்தில் விடுதலைப்புலிகள் மற்றும் தமிழ் மக்கள் மீதும் தமது வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டிருந்தனர். இவர்களை அக்காலத்தில் இராணுவ ஒட்டுக்குழுக்கள் என்றே சொல்லுவார்கள். இவ்வியக்கங்கள் தொடர்பில் தற்போதைய தலைமுறையினர் படிக்கவேண்டும். இவர்கள் செய்த தவறுக்கு பிராயச்சித்தம் தேடவேண்டும் என்பதற்காக தமிழினத்தை ஏமாற்றக்கூடாது.

ஈழப்போரின் இறுதிக்கட்டத்திலும் கூட வன்னியில் இருந்து வந்த மிக முக்கியமாக விடுதலைப்புலிகளின் தலைவர்களை இவ்வாயுதக்கட்சிகளைச் சார்ந்தவர்கள் காட்டிக்கொடுத்தனர். இக்காலத்தில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் இரு இயக்கங்களும் த.தே.கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டது. அதன் பின்னர் புளொட் இயக்கம் த.தே.கூட்டமைப்புடன் இணைந்து செயற்படலானது. ஒரு கூட்டுப்பலம் தமிழ் மக்களுக்கு மிகவும் அவசியமானது.



தேசியத் தலைவர் பிரபாகரனால் த.தே.கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அதற்கு ஆலாசனையாளராக ஊடகவியலாளர் சிவராம் அவர்கள் செயற்பட்டார் என்பது உண்மை. ஆனால் இதனை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலக்கட்டத்தில் இரா.சம்பந்தன் அவர்கள் மறுத்திருக்கின்றார் எனக்கூறி அரசியல் நடத்தப் பார்க்கிறார்கள். அவர் ஏன்? எதற்காக? அப்படிக் கூறினார் என்ற விடயத்தைக் கேட்கவில்லை. ஒரு வேளை விடுதலைப்புலிகள் தான் தமிழ் மக்களது ஏகபிரதிநிதிகள் என்று சம்பந்தன் அவர்கள் கூறியிருப்பாராகவிருந்தால் தென்னிலங்கையில் பாரிய அரசியல் ரீதியான குழப்பங்கள் ஏற்பட்டிருக்கும். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுத்திட்டம் என்கின்ற கனவு இல்லாமல் போயிருக்கும். ஆகவே இதனை ஒரு இராஜதந்திர நகர்வு என்றே பார்க்கவேண்டும்.

தொடர் போராட்டம் என்பது எந்தவொரு நாட்டிலும் வெற்றியைப் பெற்றுக்கொடுக்கவில்லை. அதனோடு சமாந்தரமான பேச்சுக்களே தீர்வினைப் பெற்றுக்கொடுத்திருக்கிறது. போராட்டத்தினது வடிவங்கள் மாற்றியமைக்கப்படும் போது அரசியல் வடிவங்களும் மாற்றியமைக்கப்படவேண்டும். அதற்காக அரசியல் வரலாறு தெரியாமல் அரசாங்கம் கொடுப்பதை மாத்திரம் பெற்றுவிட்டு வாழ்க்கையை ஏற்றுக்கொள்ள இயலாது. ஏற்கனவே இராணுவப் புலனாய்வாளர்களுடனும், அரசுடனும் இணைந்து தமது செயல் நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்த ஆயுதக்கட்சிகளும், தற்போது அரசுடன் இணைந்திருக்கும் ஆயுதக்கட்சிகளும் வெளியில் தம்மை இலங்கை அரசுக்கு எதிரானவர்கள் எனக்காட்டிக்கொண்டு பின் கதவு வழியால் அரசுடன் தொடர்புகளைப் பேணி வருகின்றனர். இந்த நிலைமைகள் மாற்றப்படவேண்டும். அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசிற்கு எதிரான நடவடிக்கைகளையேமேற்கொள்ளவேண்டும்.

1. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பில் வழியுறுத்துவதன் ஊடாக ஏனைய பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளைக் காணமுடியும்.
2. சட்டத்தின் ஊடாகவும் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கிறது.
3. ஜனாதிபதியினது பொதுமன்னிப்பின் ஊடாக விடுதலை செய்யப்படுவதற்கான வழி வகைகள் இருக்கிறது.

இவற்றைக் கையாள்வதில் தமிழ்க் கட்சிகள் தாமதிக்கின்றன என்ற ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. அதற்காக நாம் அரசாங்கத்திற்கு விலைபோகும் அல்லது அரசாங்கத்திற்கு கைகொடுக்கும் செயற்பாடுகளை மறைமுகமாகச் செய்யக்கூடாது. மக்கள் புரட்சி என்பது எந்தவொரு நாட்டிலும் அது மாபெரும் சக்தியாகத்தான் திகழ்கிறது. தற்போது நடத்தப்படுகின்ற போராட்டங்களில் இவ்வாயுதக்கட்சிகள் தவிர்ந்து பொதுமக்கள் போராட்டக் களத்தில் நிற்பார்களாகவிருந்தால் அதற்கான பெறுபேறுகள் வேறு விதமாக அமையும். இவர்களின் உள்நுழைவு என்பது கடந்த காலத்திலும் சரி, தற்போதும் சரி தவறான வழியில் மக்களை திசைதிருப்ப முற்படுகிறார்கள். த.தே.கூட்டமைப்பு என்ற ஒற்றுமையை கோர முடியாது தத்தமது கட்சிகளுக்குள் பிரிவினைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அரசியல் கட்சிகளின் போராட்டங்கள் தவிர்ந்த ஏதேனுமொருப் போராட்டம் 2009ம் ஆண்டுக்குப் பின் இவர்களுக்கு வெற்றியை ஈட்டிக்கொடுத்திருக்கிறதா? இதே முகங்கள் தான் மீண்டும் போராடி வருகிறார்கள். எதற்கெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்யவேண்டும் என்றில்லாமல் ஊரை அடித்து உலையில் போட்டவர்களும் இவ்வார்ப்பாட்டங்களில் கலந்துகொள்கிறார்கள் ஆயுதப் போராட்டங்களை கொச்சைப்படுத்தவில்லை. அவர்கள் எந்தநோக்கத்தோடு ஆயுதம் ஏந்திப்போராட புறப்பட்டார்களோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுகின்றவர்களாக, நம்பிக்கை மிக்கவர்களாக தொடர்ந்தும் செயற்படவேண்டும். ஆயுதப்போராட்டக் கட்சிகளின் தலைவர்கள் இப்போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்த போராளிகளை தெருவோரம் விட்டுவிட்டு தாம் அரசுடன் இணைந்து உல்லாச வாழ்வினை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். இது கவலைக்குரிய விடயம். தமிழினத்தின் விடிவுக்காக இறுதிவரைப்போராடிய விடுதலைப்புலிகளுக்கு அரசியல் அரங்கில் ஒரு இடமேனும் கொடுப்பதற்கு த.தே.கூட்டமைப்பின் தலைமைகள் விரும்பவில்லை. காரணம், மீண்டும் அவர்கள் உருவாக்கப்பட்டால் தமது அரசியலின் இருப்பு கேள்விக்குறியாகிவிடும் என்பதே.

ஒற்றுமையே பலம் என்று கூறிக்கொள்ளும் இவ்வாயுதக்கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைந்து வட-கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை உருவாக்கும் ஒரே நோக்கில் செயற்படுவார்களாகவிருந்தால் மக்கள் உங்களை மன்னித்து மறந்து ஏற்றுக்கொள்வார்கள். நாம் இதுவரை காலமும் எதற்காகப் போராடினோம். அந்த இலட்சியத்தின் பால் அந்த சுதந்திரக்காற்றை சுவாசிக்கும் போது தான் எம் இனம் சந்தோசமடையும். அதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளாமல் கட்சிகளுக்குள்ளேயே குழப்பங்களை விளைவித்து தமிழரசுகட்சியின் பின்னால் வால் பிடித்துக்கொண்டு ஒருவரை ஒருவர் குறைகூறிக்கொண்டிருப்பதில் எந்தவித பயனும் இல்லை. ஆயுதக்கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு குடையின் கீழ் போராட்டங்களை முன்னெடுக்க முன்வர வேண்டும். தமிழ் மக்களுக்கான உரிமையை வென்றெடுக்க அனைவரும் முன்வர வேண்டும். நாங்கள் தேசிய வாதிகள் என்றும் எமது போராட்டம் எப்படிப்பட்டது என்றும் வீரவசனம் பேசுபவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களை கடைப்பிடிப்பதன் ஊடாக தமிழ் மக்களுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

**துரியோதரன்**

# விளையாட்டு

## MCA 'E' பிரிவு கிரிக்கெட்டில் 17 நிறுவன அணிகள்

டேவிட் பீரிஸ் குறூப் ஒவ் கம்பனீஸீடன் 2 தசாப்தங்களாக தொடர்ச்சியாக கைகோர்த்து செயற்பட்டுவரும் வர்த்தக கிரிக்கெட் சங்கம் (MCA) 20ஆவது வருடமாக ஏற்பாடு செய்துள்ள DPGC சவால் கிண்ண MCA E பிரிவு லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இறுதிக் கட்டத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறது.

டேவிட் பீரிஸ் குறூப் ஒவ் கம்பனீஸின் பூரண அனுசரணையுடன் ஈ பிரிவு 25 ஓவர் லீக் போட்டிகள் தற்போது நடைபெற்றுவருதுடன் அதனைத் தொடர்ந்து நொக் அவுட் சுற்று ஆரம்பமாகவுள்ளது.

17 அணிகள் 3 குழுக்களில் விளையாடி வருகின்றன.

ஏ குழுவில் அமானா டக்காபுல், அபான்ஸ் குறூப், ஸ்டபர்ட் மோட்டர்ஸ், அலியான்ஸ் இன்சூரன்ஸ், அக்பர் பிரதர்ஸ், HSBC 'V' ஆகிய அணிகளும்

பி குழுவில் எமர் ஃபார்மா, செலின்கோ இன்சூரன்ஸ், டீஜே லங்கா, SSK ஹோல்டிங்ஸ், ஜனசக்தி இன்சூரன்ஸ், ஜோன் கீல்ஸ் குறூப் "பி" ஆகிய அணிகளும்

சி குழுவில் ப்றண்டிக்ஸ் எசென்ஷல்ஸ் "ஏ", வேர்ச்சுசா (பிறைவேட்) லிமிட்டெட், பிஸ்ஸா ஹட், LOLC, ஹேலீஸ் குறூப் "பி" ஆகிய அணிகளும் போட்டியிடுகின்றன.

கடந்த வருடம் டிசம்பர் 10ஆம் திகதி ஆரம்பமான 40 போட்டிகளைக் கொண்ட லீக் சுற்று எதிர்வரும் 15ஆம் திகதி நிறைவடையும். அதனைத் தொடர்ந்து நொக் அவுட் சுற்று ஜனவரி 21ஆம் திகதி ஆரம்பமாகும்.

லீக் சுற்றில் பிரகாசிக்கும் 16 அணிகள் முன்னோடி கால் இறுதியில் விளையாட தகுதிபெறும். முன்னோடி கால் இறுதிகள் ஜனவரி 21, 22ஆம் திகதிகளிலும் கால் இறுதிகள் ஜனவரி 28, 29ஆம் திகதிகளிலும் நடைபெறும்.

அரை இறுதிப் போட்டிகள் பெப்ரவரி 5ஆம் திகதியும் இறுதிப் போட்டி பெப்ரவரி 11ஆம் திகதியும்.

லீக் சுற்றில் அதிசிறந்த துடுப்பாட்ட வீரர், அதிசிறந்த பந்துவீச்சாளர், தொடர் நாயகன் ஆகிய விருதுகளும் நொக் அவுட் சுற்றில் இறுதி ஆட்ட நாயகன் விருதும் டேவிட் பீரிஸ் குறூப் ஒவ் கம்பனீஸினால் வழங்கப்படும்.

இப் போட்டிக்கான பூரண அனுசரணையை ஏற்றுள்ள டேவிட் பீரிஸ் குறூப் ஒவ் கம்பனீஸ் சார்பாக டேவிட் பீரிஸ் மோட்டர் கம்பனி பிறைவேட் லிமிட்டெடின் குழும கூட்டாண்மை தொடர்பாடல்கள் பணிப்பாளர் ரமணி பராக்ரம, அனுசரணைக்குரிய மாதிரி ஆவணத்தை வர்த்தக கிரிக்கெட் சங்கத் தலைவர் நலின் விக்ரமசிங்கவிடம் MCA பிச் கேட்போர்கூடத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது வழங்கினார்.

இந்த நிகழ்வில் வர்த்தக கிரிக்கெட் சங்கத்தின் உதவி செயலாளர் மற்றும் அனுசரணைக் குழுத் தலைவர் ரொஹான் சோமவன்ச, பொதுச் செயலாளர் தரிந்த்ர களுப்பெரும, டேவீட் பீரிஸ் ஹோல்டிங்ஸ் குழுமத்தின் தலைமை சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள் அதிகாரி நதி தர்மசிறி, அசெட்லைன் பினான்ஸ் லிமிட்டெட் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி அஜன்த ப்ரேமசிறி ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.




## No Ball களை வாரி வழங்கியதால் விமர்சனம்!

2 வது டி20 ஆட்டத்தில் நிறைய நோ பால்களை வீசிய வேகப்பந்து வீச்சாளர் அர்ஷ்தீப் சிங் குறித்து தனது கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார் கேப்டன் பாண்டியா.

புணே நகரில் நடைபெற்ற 2 வது டி20 ஆட்டத்தில் இலங்கை அணி, 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியடைந்தது. முதலில் பேட்டிங் செய்த இலங்கை அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 206 ஓட்டங்கள் எடுத்தது. குசால் மெண்டிஸ் 52, தலைவர் தசுன் ஷனகா 56 ஓட்டங்கள் எடுத்தார்கள். இந்திய அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 190 ஓட்டங்கள் எடுத்துத் தோல்வியடைந்தது. அக்ஷர் படேல் 65, சூர்யகுமார் யாதவ் 51 ஓட்டங்கள் எடுத்தார்கள்.

இந்த ஆட்டத்தில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் அர்ஷ்தீப் சிங், 5 நோ பால்களை வீசினார். இந்திய அணி 7 நோ பால்களையும் 4 வைட்களையும் வீசியது ஆட்டத்தில் திருப்புமுனையை ஏற்படுத்தியது. அர்ஷ்தீப் வீசிய நோ பால் காரணமாக 19 வது ஓவரில் கேட்ச் கொடுத்தும் தப்பித்தார் ஷனகா.

டி20 கிரிக்கெட்டில் ஓர் ஆட்டத்தில் அதிக நோ பால்களை வீசிய பந்துவீச்சாளர் ஆனார் அர்ஷ்தீப். நோ பால்கள், ஃப்ரீ ஹிட்களால் இந்திய அணி 27 ஓட்டங்களைக் கொடுத்தது. கடைசியில் 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதனால் அர்ஷ்தீப் சிங் மீது அதிக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில் இதுகுறித்து இந்திய அணியின் தலைவர் பாண்டியா கூறியதாவது:

நோ பால்கள் வழியாக இலவசங்களை வாரி வழங்கக் கூடாது. ஓட்டங்கள் கொடுக்கலாம். முன்பும் அர்ஷ்தீப் சிங் சில நோ பால்களை வீசியுள்ளார். அவர் மீது பழி சுமத்தவில்லை. கிரிக்கெட்டின் இயல்பான விஷயங்களைப் பின்பற்ற வேண்டும். எந்தவொரு கிரிக்கெட்டிலும் நோ பால் வீசுவது குற்றமாகும். அவர் மீது கடினமான விமர்சனங்களை வைக்க விரும்பவில்லை. அவர் மீண்டும் பயிற்சிக்குச் சென்று தன் தவறுகளைச் சரி செய்ய வேண்டும். சர்வதேச கிரிக்கெட்டில் இத்தகைய தவறுகளைச் செய்யக்கூடாது என்றார்.

## உலகிலேயே மிக உயரமான கல்லறை தோட்டத்தில் பிரேசில் கால்பந்தின் ஜாம்பவான் பீலேயின் உடல் அடக்கம்

பிரேசில் கால்பந்தின் ஜாம்பவான் பீலே புற்று நோய் பாதிப்பால் கடந்த 29ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது இறப்பு பிரேசிலின் தேசிய துக்கமாக அனுசரிக்கப்பட்டது. பீலேயின் உடல் பிரேசில் நாட்டின் சாவ் பாலோ வைத்தியசாலையில் இருந்து கொண்டு செல்லப்பட்டு சாண்டோஸ் நகரில் உள்ள விலா பெல்மிரோ ஸ்டேடியத்தில் வைக்கப்பட்டது.

அன்று(02) காலை 10 மணி முதல் அன்று(03) காலை 10 மணி வரை ரசிகர்கள், பொதுமக்கள் 24 மணி நேரம் பீலேவுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலி செலுத்துவதற்காக இலட்சக்கணக்கானோர் பெல் மிரோ ஸ்டேடியத்தில் குவிந்தனர். ஒருவர் ஒருவராக கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினார்கள்.

அனைவரும் அஞ்சலி செலுத்திய பிறகு பீலேயின் உடல் அப்பகுதியில் உள்ள வீதிகள் வழியாக ஊர்வலமாக எடுத்து செல்லப்படுகிறது.

அஞ்சலி நிகழ்ச்சி முடிந்ததும் 4.4 ஏக்கர் நிலப்பரப்பில், 14 அடுக்கு மாடிகளை கொண்ட நெக்ரோபோல் எகுமெனிகா நினைவு கல்லறை தோட்டத்தில் பீலேவின் உடல் அடக்கம் செய்யப்படுகிறது.

இங்குள்ள பெட்டகத்தில் பதப்படுத்தப்பட்ட அவரது உடல் வைக்கப்படும். இதுதான் உலகிலேயே மிக உயரமான கல்லறை தோட்டமாகும்.

இங்கு நடக்கும் இறுதிச்சடங்கில் அவரது குடும்பத்தினர் தவிர வேறு யாருக்கும் அனுமதி கிடையாது. கால்பந்து நாயகன் பீலேவுக்கு விடையளிக்க இலட்சக்கணக்கான மக்கள் திரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பீலே பிரேசில் அணிக்காக 3 உலக கோப்பையை (1958, 1962, 1970) வென்று கொடுத்துள்ளார். 12 கோல்கள் உலக கோப்பையில் அடித்துள்ளார்.








# உலக வலம்

## அமேசான் நிறுவனத்தின் புதிய அறிவிப்பு!

கொரோனா தொற்று பரவலுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள பொருளாதார சூழல் காரணமாக டுவிட்டர், மெட்டா நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களின் ஊழியர்களில் பெரும்பாலானவர்களை கடந்த ஆண்டு 2ஆம் பாதியில் பணி நீக்கம் செய்தது.

இதைத்தொடர்ந்து புகழ்பெற்ற அமேசான் நிறுவனமும் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆயிரம் ஊழியர்களை பணி நீக்கம் செய்திருந்தது. இந்நிலையில் அமேசான் நிறுவனத்தின் தலைமைச் செயலாளர், ஊழியர்களுக்கு ஒரு செய்தி அனுப்பியுள்ளார். அதில், தற்போது நிலவும் கடினமான பொருளாதாரச் சூழ்நிலையை எதிர்கொள்வது சவாலாக உள்ளது. இதனால் மேலும் 18 ஆயிரம் ஊழியர்களை பணி நீக்கம் செய்ய முடிவு செய்துள்ளோம் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பணி நீக்கமானது இந்த ஆண்டு தொடக்கத்திலேயே நடைபெற உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருப்பது அந்த நிறுவன ஊழியர்களுக்கு அதிர்ச்சி அளித்துள்ளது.




## அமெரிக்காவில் பூட்டிய வீட்டுக்குள் இடம்பெற்ற மர்மமான துப்பாக்கிச் சூடு

அமெரிக்காவில் பூட்டிய வீட்டுக்குள் இடம்பெற்ற மர்மமான துப்பாக்கிச் சூட்டில் 5 குழந்தைகள் உள்பட 8 பேர் உயிரிழந்துள்ளனர். அமெரிக்காவின் உதா மாகாணத்தில் சால்ட் லேக் சிட்டியில் குடியிருப்பில் உள்ளவர்களின் நலனுக்கான பரிசோதனையில் ஈடுபடுவதற்காக அதிகாரிகள் சென்றனர். அப்போது ஒரு வீட்டுக்கு சென்றபோது அந்த வீட்டில் 5 குழந்தைகள் உள்பட 8 பேர் மர்மமான முறையில் இறந்து கிடந்தனர்.

தகவல் அறிந்து வந்த பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். பொலிஸாரின் விசாரணையில் அவர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தது தெரியவந்தது. 42 வயதான மைக்கேல் ஹைட் என்பவர் அவரது மனைவி விவாகரத்து கோரி இரண்டு வாரங்களுக்குப் பின்னர் வீட்டில் ஏழு குடும்ப உறுப்பினர்களை சுட்டுக் கொன்றுவிட்டு தன்னைத்தானே சுட்டுக் கொண்டுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்காவில் துப்பாக்கி சூடு என்பது அன்றாடம் நடைபெறும் சம்பவமாகி விட்டது. அங்கு பொதுமக்கள் கூடும் கடைகள், வணிக நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் கல்லூரிகள் என பல்வேறு இடங்களில் துப்பாக்கி சூடு சம்பவம் நடைபெற்று வருகிறது.

## 20கோடி டுவிட்டர் பயனாளிகளின் கணக்குகள் திருட்டு!

உலகம் முழுவதும் ஏராளமானவர்கள் டுவிட்டர் பயன்படுத்தி வருகின்றனர். அவர்கள் அதன்மூலம் தகவல்களை பரிமாறி கொள்கின்றனர்.

ஆனால் அவ்வப்போது சில ஹேக்கர்கள் இவர்கள் டுவிட்டர் கணக்குளை முடக்குவதை வாடிக்கையாக கொண்டு உள்ளனர்.




இந்த நிலையில் தற்போது 20 கோடி டுவிட்டர் பயனாளர்களின் விவரங்கள் திருடப்பட்டுள்ளதாக இஸ்ரேல் இணையதள கண்காணிப்பு நிறுவனமான ஹெட்சன்ராக் என்ற நிறுவனம் தெரிவித்து உள்ளது.

இது தொடர்பாக அந்த நிறுவனத்தின் துணை நிறுவனர் அலன்கால் கூறியதாவது:- 20 கோடி டுவிட்டர் பயனாளர்களின் இ-மெயில் முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்களும் திருடப்பட்டு உள்ளது கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது. 2021-ம் ஆண்டிலேயே இது நடந்து இருக்கலாம் என நினைக்கிறேன். டுவிட்டர் நிறுவனத்தை எலான் மஸ்க் வாங்குவதற்கு முன்பு இது நடந்து உள்ளது.

ஆனால் இதன் பின்னணியில் உள்ள ஹேக்கர்களின் இருப்பிடம் குறித்தோ இந்த செயலில் ஈடுபட்டது யார்? என்பது குறித்தோ எந்த தகவலும் இல்லை. இதனை விசாரிக்கவும், சரி செய்யவும் டுவிட்டர் நிறுவனம் என்ன நடவடிக்கை எடுத்தது என்பது குறித்து எந்த தெளிவான விளக்கங்களும் இல்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார். ஹேக்கர்கள் மூலம் பலரது அந்தரங்க தகவல்களும் திருடப்பட்டு இருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது. இதனால் டுவிட்டர் பயனாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

## சோமாலியாவில் இரு கார் குண்டு தாக்குதல்



சோமாலியாவின் ஹிரான் மாகாணத்தில் நடத்தப்பட்ட இரு கார் குண்டு தாக்குதல்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 09 பேர் கொல்லப்பட்டுள்ளதாக, சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் பிபிசி செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதல்களில் மேலும் 26 பேர் கொல்லப்பட்டுள்ளதாக உள்ளூர் பிரதி பொலிஸ் ஆணையாளர் தெரிவித்துள்ளார். அல் கைதாவுடன் தொடர்புடைய அல் ஷபாப், இந்த கார் குண்டு தாக்குதல்களுக்கு பொறுப்பு கூறியுள்ளது.

தமது வீடு மற்றும் உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினரும் இலக்கு வைக்கப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக மஹாஸ் மாவட்ட பொலிஸ் ஆணையாளர் கூறியுள்ளார். அதேநேரம், மஹாஸ் நகர மேயர் மற்றும் சந்தை என்பன இலக்கு வைக்கப்பட்டு இரண்டாவது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதுவொரு பயங்கரமான தாக்குதல் என சம்பவத்தை நேரில் கண்டவர் AFP-இற்கு தெரிவித்துள்ளார்.

## சீனாவில் அதிவேக ரயில்களின் கோளாறுகள் சரி செய்யப்படுகின்றன

ஜனவரி 04, கிழக்கு சீனாவின் ஷான்டாங் மாகாணத்திலுள்ள கிங்டாவோவில் உள்ள CRRC Qingdao Sifang Co. லிமிடெட் பணிமனையில் ஒரு ரயிலை தொழில்நுட்ப வல்லுநர்கள் திருத்தம் செய்கின்றனர். சீனாவில் அதிவேக ரயில்களின் முக்கிய உற்பத்தியாளராக, CRRC Qingdao Sifang Co. Ltd. விளங்குகிறது. வரவிருக்கும் வசந்த விழா பயண அவசரத்துக்கு சேவை செய்யும் ரயில்களின் சீரான செயற்பாட்டை உறுதி செய்யும் முயற்சியில் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஈடுபடுகின்றனர்.





## ஓநாயாக மாறி ஆச்சரியத்தை ஏற்படுத்திய இளைஞன்!

ஜப்பானை சேர்ந்த நபர் ஒருவர் அதிகளவில் பணம் செலவு செய்து ஓநாயாக மாறி ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளார். ஜப்பானை சேர்ந்த இளைஞன் ஆடை அலங்கார நிபுணர் ஒருவரை அணுகி ஓநாயாக மாறுவதற்கான தனது ஆசையை வெளிப்படுத்தினார். ஆடை அலங்கார நிபுணர் அதிகமாகச் செலவு ஆகும் எனக் கூறியும் ஜப்பான் இளைஞன் சம்மதம் தெரிவித்ததால் வேலைகள் ஆரம்பம் ஆகியது.

50 நாட்களில் வாலிபர் ஓநாய் போல உருமாறுவதற்கான உடைகள் தயாரானது. தயாரான உடைகளை அணிந்து பார்த்ததில் ஜப்பான் இளைஞன் கச்சிதமாக ஓநாய் போலவே காட்சி கொடுத்தார். இதற்காக ஜப்பான் இளைஞன் செலவு செய்த தொகை மட்டும் இலங்கை மதிப்பில் 80 இலட்சம் ரூபாய்களாகும்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, "சிறு வயதில் இருந்தே விலங்குகளைப் பிடிக்கும். நானும் விலங்குகள் போல் மாறினால் என்ன எனத் தோன்றியது. இதற்காக நான் அணுகிய நிறுவனமும் சிறப்பாக ஆடைகளைத் தயார் செய்து கொடுத்தனர். எனது உருவத்தைக் கண்ணாடியில் பார்த்த போது என்னாலேயே நம்ப முடியவில்லை" எனக் கூறினார்.





















இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 08.01.2023 அன்று வெளியிடப்பட்டது.